

ரோஜா மலரும் நேரம்

இந்திரா சௌந்தர் ராஜன்

ரோஜா மலரும் நேரம்

1

யாரோ சொன்னாங்க... என்னன்னு?

மணி ஓசை வரும் முன்னே...
கொலை வரும் பின்னே!

சந்தோஷமாகத் தென்பட்டான் பிரசாத்.

சந்தோஷமென்றால் சமுத்திரமளவு சந்தோஷம்!

அவனைப் பரசவப்படுத்தி ஜோதிமயமாக்கிய சேதியைச் சொன்ன சாரதா, அடக்கமாக அதே சமயம் அவனுக்கு நிகரான சந்தோஷத்தோடும் வெட்கத்தோடும் தலைகுனிந்திருந்தாள்.

சட்டென்று அவளைத் தன் பக்கமாய் இழுத்து அணைக்கிறான் பிரசாத். அவள் துவண்டும் சிவந்தும் சிலிர்க்கும் சமயம் அந்த பங்களாவுக்குள்ளே கைலாசத்தின் வாக்குவாலீஸ் ஹாரன் சப்தத்தோடு பிரவேசித்திருந்தது.

"விடுங்க... மாமா வந்துட்டாரு..."

சாரதா அவன் அணைப்பில் சிருங்காரமாய் சிணுங்கி விலகப் பார்த்தாள். அவனும் காரின் சப்தம் கேட்டு, சட்டென்று அவளை விலக்கினான்.

கூடவே அதிசயாக மிக அதிசயமாக கம்பீரமாக நிமிர்ந்தான்.

கோட்டும் சூட்டும் சரசரக்க, வி.ஐ.பி. சூட்கேஸ் சகிதம் உள்ளே நுழைந்தார் கைலாசம். அப்படி அவர் நுழையும் போதெல்லாம் பூனை போல் பதுங்கிக் கொண்டு, அவரது தேடலில் அகப்படாமல் நழுவப் பார்க்கும் ஒருவனாக இல்லாமல், இன்று அவன் நிமிர்ந்து நின்று தன்னை எதிர்கொள்வதில் கைலாசத்துக்குள் லேசாக ஆச்சரிய மின்னல்.

"என்ன விஷயம்?" கழுத்தை அதுவரை இறுக்குவது தெரியாமல் இறுக்கிக்கொண்டிருந்த டையை இளக்க மாக்கியபடியே சாரதாவைப் பார்த்தார் கைலாசம்.

அவர் அப்படிப் பார்த்த மறுவினாடியே, சாரதா அவரை நெருங்கிச் சென்று அவர் கால்களில் விழுந்தாள்.

கார் சாவியை சாரதாவிடம் கொடுக்க வந்த டிரைவர் கண்ணாயிரம், கைலாசம் அவிழ்த்துக் கொடுக்கும் கோட்டையும் ஷூக்களையும் வாங்கி உரிய இடத்தில் வைக்க ஓடிவந்த வேலாயுதம், டைனிங்ஹாலை விட்டு எதேச்சையாக எதன் பொருட்டோ வெளியே வந்த சமையல்காரி பட்டம்மாள்... எல்லோருமே ஆச்சரியமாக காலில் விழுந்த சாரதாவைப் பார்க்க...

"என்னம்மா, என்ன விஷயம்?" ஆவல் தாளாமல் ஒலியோடு பிரிகிறது கைலாசத்தின் உதடுகள்

"உங்க பிள்ளை அப்பாவாகப் போறார் மாமா!" நிதானமாக, ஆனால் அழுத்தமாக அந்தச் சேதியைச் சொன்னாள் சாரதா.

"நெஜமாவா சாரதா? நெஜமாவா சொல்றே?" திடும்மென்று அலையடிக்கும் சந்தோஷத்தில் அவருக்குள் வார்த்தைகள் வெளிவர சிரமப்பட்டன.

"ஆமாப்பா, டாக்டரே வந்து பார்த்து கன்ஃபர்ம் பண்ணிட்டுப் போயிருக்காரு" - பிரசாத் ஏறத்தாழ மூன்று

வருடங்களுக்குப் பிறகு தைரியமாய் அவர் எதிரே வாய் திறந்தான்.

'டைரக்டர்ஸ் போர்டு மீட்டிங்... யூனியனோடு போனஸ் பேச்சுவார்த்தை... புதிய எந்திரங்களின் எரெக்ஷன்' என்று தனது தொழிற்சாலை சம்பந்தமாய் அவரது மூளையைக் கசங்கவிட்டுக்கொண்டிருந்த சகல விஷயங்களும் ஒரு ஓரமாய் ஒதுங்கிக்கொள்ள, பளபள விழிகளோடு பிரசாத்தைப் பார்த்தார் - எப்பொழுதும் சுட்டெரிப்பது போலவே பார்த்துப் பார்த்து, 'ஒழிஞ்சு போ சனியனே' என்று கத்தி, வெடவெடத்துப் போய் நெஞ்சைக் கைகளில் பிடித்துக்கொண்டு, பக்கத்து சோபாவில் சரிந்து விழுந்து விடுபவராக இல்லாமல், இன்று அவர் அப்படிப் பார்ப்பதில் அவனுக்குள் அத்தி பூத்தது. இதுதானே அவனுக்குத் தேவை!

"வைத்யநாத தீட்சதன் சொன்னா சொன்னபடி நடக்கும். அவன் சொன்னபடிதான் எல்லாம் நடந்துருக்கு. அணுகூட பிசிகினதில்லை. அவன்தான் சொன்னான் 'கைலாசம், உனக்கு வேறு வாரிசே கிடையாது. இப்ப இருக்கற உன் ஒரே பையன்தான் உன் சந்ததிக்கே முற்றுப்புள்ளி'ன்னு. நான்கூட நம்பிட்டேன். நீகூட முற்றுப்புள்ளி வைக்கற மாதிரிதானே நடந்துகிட்டே? ஆனா, இன்னிக்கு இந்தச் சேதியைக் கேக்கறச்சே என் னாலயே நம்பமுடியலை. வைத்யநாத தீட்சதன் வாக்குகூட பொய்யாகுமா என்ன?" கைலாசத்தின் ஆச்சரியமான பேச்சு ஏனோ பிரசாத்தை தலைகுனிய வைத்தது. சாரதா மட்டும் கூர்மையாக அதைக் கேட்டு இதழ்க்கடையில் அலட்சியமான ஒரு புன்சிரிப்பைத் தேக்கியிருந்தாள்.

இனியும் அங்கே நின்றுகொண்டிருந்தால் அது ஆபத்தில் முடியும் என்பது போல் வேலைக்காரர்கள் விவேகமாக ஒதுங்கியிருந்தார்கள்.

"நல்லா... என்ன அப்படிக் கேட்டுட்டீங்க? என் ஃபேமிலி டாக்டர் அவர்!"

"ஓ கே. நீங்க கண்டினியூ பண்ணுங்க..."

"எதுல விட்டேன்...? ஆங்! விஸ்வநாத்துதான் அவனைக் காப்பாத்தினார்ன்னு சொன்னேன் இல்லையா? அவன் அந்தப் பழக்கத்தில் இருந்து மீண்ட பிறகு அவனுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சேன் ஆனா, ஏனோ அவனுக்கு செக்ஸ்ல இண்ட்ரஸ்ட்டே இல்லை. என் மருமககூட ரொம்ப நாள் சேராமலே இருந்தான்! இது எனக்குத் தெரியலை. என் மருமகளும் சொல்ல வெட்கப் பட்டுக்கிட்டுச் சொல்லலை. எனக்கோ பேரனைப் பார்க்கணும்கற தவிப்பு. இரண்டு வருஷம் கழிச்சு ஒரு நாள் வாய்விட்டே கேட்டுட்டேன். என் மருமகளும் தன் வேதனையைக் கொட்டி அழுதா. என்னால அதைச் சகிக்க முடியலை. உள்ளயும் என் மகனை பைத்தியம் மென்டல்னு டில் பண்ணுவாங்க. அதனால நிலைமை ரொம்ப மோச மாகவும் என் மகனை நான் கண்டிச்சேன். அவன் தப்பாப் புரிஞ்சிக்கிட்டு தற்கொலைக்கே முயன்றான். தீட்சிதர்ங்கற ஜோசியரைத் தெரியுமா?" தனது நீண்ட பேச்சில் கைலாசம் ருத்ராவைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி இது.

"தெரியும் - ரொம்ப சரியா ஜாதகம் பார்த்துப் பலன் சொல்றவர்ன்னு கேள்விப்பட்டிருக்கேன்."

"அஃப்கோர்ஸ். அவர் சொன்னா சொன்னதுதான். அவரும் சொன்னாரு - உங்க மகனுக்குக் குழந்தை பிறக்காதுன்னு. இது என் மருமக வீட்டுக்குத் தெரிஞ்சு அவங்க அப்பா அம்மா வந்து ரொம்ப ரகளை பண்ணிட்டுப் போயிட்டாங்க. என் ஸ்டேட்டஸுக்கு எனக்கு வர்ற இந்தமாதிரி பிரச்னைகளை ரொம்ப பாதிப்பை,

தந்தன. இதுல இருந்து மீள ஒரே வழிதான் தெரிஞ்சது. பேசாம என் சொத்துக்கள் அவ்வளவுக்கும் கார்டியனா என் மருமகளையும் வாரிசா என் பேரனோ பேத்தியையோ நிர்ணயம் பண்ணி உயில் எழுதிட்டேன். இது என் குடும்ப வக்கீலுக்கும் இன்னும் சிலருக்கும் மட்டுமே தெரிஞ்ச ரகசியம். இப்படிச் செஞ்சாலாவது அவன் தன் மனைவியை நேசிக்க மாட்டானான்னு நான் நெனைச்சது தான் காரணம். அவனுக்குக் குழந்தை பிறக்கலைன்னா சொத்துக் கோயிலுக்குப் போயிடும்கற வரிகள்தான் அந்த உயிலினுடைய உயிர்நாடி!"

13

யாரோ சொன்னாங்க... என்னன்னு?

கொலையும் ஒரு கலை!
ஆனால் கலையெல்லாம்
கொலையல்ல...

கைலாசம் தன் உயில் பற்றி நிறுத்திய அந்தச் சேதி ருத்ரா, ஜெயக்குமார் இருவருக்குமே ஒரு விளக்கைப் போலத் தோன்றியது.

"சார், அப்புறம்?" - மிகுந்த ஆர்வத்தைக் கண்களில் தேக்கிக் கேட்டான் ஜெயக்குமார்.

"நான் இந்த மாதிரி உயில் எழுதினது என் மகன், மருமகள் இரண்டு பேருக்குமே பிடிக்கலை. என் நினைப்பை என் மருமகள் மெல்ல புரிஞ்சுகிட்டு சமாதான மாயிட்டா. ஆனால், பிரசாத் புரிஞ்சுக்கலை. நான் அவனுக்குத் துரோகம் பண்ணிட்டதாச் சொல்லி புலம்பினான். அவன் ஒவ்வொரு பைசாவுக்கும் என் மருமகளை நாடும்படிப் பண்ணினேன். அன்பாகவும் சொன்னேன்.

இதனால் நல்ல பலன் கிடைச்சது. என் மருமகளும் கர்ப்பம் தரிச்சிருக்கா இப்போ!

ஆனால்... இந்த உயில் விஷயம் எப்படியோ கொலைகாரனுக்குத் தெரிஞ்சிருக்கு ருத்ரா, அதுதான் எப்படின்னு எனக்குத் தெரியலை."

கைலாசம் ஆசுவாசம் தளும்பச் சொல்லி நிறுத்தினார்.

"அப்படீன்னா கொலைகாரன் உங்களுக்கு ரொம்ப நெருக்கமான வட்டத்துல இருக்கான்னு சொல்லாமல் சொல்றீங்க! அப்படித்தானே சார்?"

ருத்ரா ஆர்வமாகக் கேட்டார்.

"சார், உங்களுக்கு ரொம்ப நெருக்கமானவங்க யாராவது பக்கத்து ஊர்களில் இருக்காங்களா?" குறுக்கே வேகமாக நுழைந்தான் ஜெயக்குமார்.

"பக்கத்து ஊர்களிலா? அப்படி யாரும் இல்லியே...!" என்றார் கைலாசம்.

காற்றுப்போன பலூன் போல ஆனான் ஜெயக்குமார்.

"ருத்ரா- இரண்டுபேர் கதைகளை முடிச்சிட்டு வந்து பணத்தை வாங்கிக்கறது பற்றிப் பேசறதாச் சொல்லியிருக்காளே, நான் என்ன பண்ணட்டும்?"

கைலாசம் ருத்ரா பக்கம் திரும்பினார்.

"அந்த இரண்டு பேர்ல ஒருத்தர் கதையை அவன் சொன்ன மாதிரி முடிச்சிட்டான் சார்!" ருத்ரா கவலை தேயச் சொன்ன செய்தி கைலாசத்தை அதிர்ச்சிக் குள்ளாக்கியது.

"என்னது? சொன்ன மாதிரியே செஞ்சிட்டானா? யார் அந்த நபர்?"

"டாக்டர் விஸ்வநாத்!"

"மைகாட்! என் குடும்ப நண்பர் விஸ்வநாத்தா? கிரேட் சர்ஜன் விஸ்வநாத்தா? ருத்ரா, நீங்க சொல்றதை என்னால் நம்பவே முடியலே!"

"ஜி.எச்.க்குப் போங்க புரியும். பாடி அங்கதான் போஸ்ட்மார்ட்டம் பண்ணப் போயிருக்கு."

கைலாசம் பேயறைந்தது போல் ஆகி, "இப்ப என்ன பண்றது ருத்ரா? அவன் பணம் கேட்டிருக்கானே, கொடுத்துடுவோமா?" என நடுங்கியபடி கேட்டார்.

ருத்ராவிடம் அதி தீவிர சிந்தனை, புழுக்கூட்டமாய் அது நெற்றியில் நெளிவது தெரிந்தது.

ஜெயக்குமார் டேபிள் வெயிட்டை உருட்டிக் கொண்டு உணர்ச்சிப் பிழம்பாயிருந்தான்.

"அவசரப்படாதிங்க... மோப்ப நாய் ஷீலா லேசா எங்களுக்கு வழிவிட்டிருக்கு. நாங்களும் பல விதத்துல வலை விரிச்சிருக்கோம். ஆள் எப்படியிருப்பான், சுமாரா எவ்வளவு உயரம் எல்லாம் தெரிஞ்சிருக்கு. அவன் அடுத்த நபரை நெருங்கறதுக்குள்ளே அவனைப் பிடிச்சிடுவோம் - கற நம்பிக்கை எங்களுக்கிருக்கு..." ருத்ரா சொன்னதைக் கேட்டு கைலாசம் விரக்தியாகச் சிரித்தார். தனக்கு நம்பிக்கையில்லை என்று சொல்லாமல் சொன்னார்.

"தீட்சிதர் சொன்னது சரிதான். என் மகன் மரணத்துக்கு ரொம்ப சமீபத்துலதான் இருக்கான்" என்றவர், பெருமூச்சோடு விடைபெற்றுக் கொண்டார்.

அவர் அப்பால் நகரவும் ஜெயக்குமார் சட்டென்று ருத்ராவைப் பிடித்தான்.

"சார், முக்கியமான விஷயத்தைச் சொல்லலியே நீங்க?"

"என்ன ஜெயா?"

"கொலைகாரன் எப்படியிருப்பான். உயரமெல்லாம் தெரிஞ்சிருக்குன்னு சொன்னீங்களே...?"

"ஆமா ஜெயா. டாக்டர் விஸ்வநாத்தைக் கொல்ல அவன் டிஸ்பென்சரிக்குப் போன இடத்துல எம்.என்.ஓ. பிரபாகர் அவனைப் பார்த்திருக்காரு. அவர் மூலமா தெரிஞ்ச விஷயம்தான் அது."

"என்ன தெரிஞ்சிச்சு? எப்படி இருப்பான் அவன்?"

"சுமாரா அஞ்சரை அடி உயரம். சிவப்பு நிறம். நடுவகிடு எடுத்துவாரின வழிசலான ஹேர்ஸ்டைல். கூறுப்பான கண்ணாடி."

"உயரம் மட்டும் ஓ.கே. மத்ததெல்லாம் மேக்அப்பா இருக்கலாம் அல்லவா?"

"இருக்க வாய்ப்பிருக்கு."

"சார், ஒரு ஐடியா. கைரேகை அப்புறமா தடயங்கள் இதை அடிப்படையா வெச்சு வர்ற ரிப்போர்ட்டை எவ்வளவு சீக்கிரம் வாங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வாங்குவோம். இப்பவே இம்மீடியட்டா கொலையாளி கைது பன்னு பத்திரிகைகளுக்குப் பொய் தகவல் தருவோம். செய்தியை நிச்சயம் அவன் பார்ப்பான். பார்த்துட்டு ப்ளான் பண்ணி ரியாக்ட் பண்ணலாம் அவன். ஆவியூர்ல இருந்து பஸ் ஸ்டாண்ட்வரைக்கும் உள்ள முப்பது கிலோ மீட்டர் தூரத்துக்கு எங்க எங்க பப்ளிக் டெலிபோன் இருக்கோ அங்கெல்லாம் விஜிலென்ஸ் போலீஸை மடக்கப்பிச் தயாரா இருக்கச் செய்வோம்."

"வெரிகுட்! அப்புறம்?"

"நிச்சயமாக அதிகபட்சம் பத்துகூட இருக்காது. அந்த பூத் கனெக்ஷனையெல்லாம் டெலிபோன்ல மொல்லி ட்ரேஸ் பண்ணுவோம்."

"சப்போஸ் அவன் போன் பண்ணலைன்னா?"

"நிச்சயம் பண்ணுவான். கொல்லப்போறதையே போன் பண்ணிச் சொன்னவன். இதைப் பார்த்து ஆச்சரியப்படமாட்டானா? அவன் கணக்குப்படி பிரசாத் வேற பாக்கி இருக்கான். அவங்ககிட்ட பணம் வேற கேட்டிருக்கான். எல்லாத்துக்கும் அவன் போன் பண்ணித் தானே தீரணும்?"

"அப்படி ஒண்ணும் கட்டாயமில்லையே... லெட்டர் எழுதலாமே?"

"என்ன சார், என் ஐடியா எல்லாத்தையும் டிஸ்கரேஜ் பண்ணிக்கிட்டு..."

"என்ன பண்றது - கொலையாளி எமகாதகனாச்சே! நாம ட்ரேஸ் பண்ணி அவன் இடத்தைத் தெரிஞ்சுப் போம்கற அறிவு அவனுக்கும் இருக்கும் ஜெயா. இதை ஏற்கெனவே அவன் என்கிட்ட தெரிவிச்சிருக்கான். நான் லாட்ஜ்லதான் தற்சமயம் தங்கியிருக்கேன். அங்க அவன் போன் பண்ணலாம்னு நெனச்சு ட்ரேஸ் பண்ணவும் அவன் குரலை ரெக்கார்ட் பண்ணிக்கவும் ஏற்பாடு பண்ணியும் இதுவரை பலனில்லை."

"சார், அவன் பழைய கேடியாகூட இருக்கலாமில்லயா? ஜெயில் ரெக்கார்ட்ஸை வெரிஃபை பண்ணினா என்ன?"

"இந்த விஷயத்துல அவன் நம்மைக் குழப்பியிருக்கான். இதுக்கு முந்தி பல கொலை பண்ணியிருக்கானாம் ஆனா, நம்மால அவனைப் பிடிக்க முடியலையாம். இப்பவும் பிடிக்க முடியாதுங்கறான்..அவனுக்கு அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கை ஜெயா."

"அவன் இடம் கொடுத்தாத்தான் நாம அவனைப் பிடிக்கமுடியுங்கற அளவுக்குப் பண்ணிட்டானே சார்.

ஆமா, ரெண்டு நாளா நீங்க எங்கேயும் என்கொயரியே பண்ணலையா?"

"பண்ணினேன். இந்தக் கொலைகள் எதனால நடக்குங்கறதுக்கான விஷயம் லேசா தெரியவந்தது."

"எதனால?"

"இந்தக் கொலைகளுக்கு அடிப்படைக் காரணம்

முத்துசாமி வந்துகொண்டிருந்தான். (ஜெயக்குமாரை பஸ்ஸில் சந்தித்த அந்த முத்துசாமிங்க!). பாந்தமான இடத்தைப் பார்வை தேடியது. அடர்த்தியான மறைவு களிலெல்லாம் முண்டாசு சுற்றிய மனிதத்தலைகளும் சுருட்டுப்புகையும் காட்சி தந்து அவனுக்குள் எரிச்சல் பாய்ச்சின.

வேலிகாத்தன்காட்டுக்குத் தெற்கில் ஆளுயர மண் திட்டுக்கள், நடுநடுவே பாம்புப் புற்றுகள்!

அவசரத்துக்குப் பாதகமில்லை என்று அங்கே ஒதுங்கினான். பத்து நிமிடத்துக்குப் பிறகு நிம்மதியோடு நிமிர்ந்தவன் 'உலகம் பிறந்தது எனக்காக' என்று ஹம் செய்தபடி வேகமாக நடையைப் போட்ட போதுதான் எதிர்பாராமல் தட்டுப்பட்ட அந்தக் கோதுமை நாகம்.

முத்துசாமி அதைப் பார்க்காமல் நடைபோட. நீண்ட அந்த வாலின் மேல் அவனது பாதம் மிதிபட்டது! மறுவினாடி அது உக்கிரமாய் சீறி அவன் பாதத்தில் ஒரு போடு போட்டது!

விகாசா நர்சிங்ஹோம்!

மிதந்த காற்றோட்டத்தோடு கிடந்தது.

வெறிச்சோடிப் போயிருந்தன வார்டுகள்.

14

யாரோ சொன்னாங்க... என்னன்னு?

அறுபத்தைந்தாவது கலை
கொலை!

வாசல்கேட் அருகேயே ஒரு போலீஸ்காரர் தென்பட்டார்.

உள்ளே வார்டு வராந்தாவில்கூட காக்கி உடுப்பு களின் நடமாட்டம்!

படுக்கையில் கிடக்கும் சில நோயாளிகள் செயற்கையாக வாயை மூடிக்கொண்டு படுத்திருந்தனர்.

"எல்லாம் தொழில்முறைல வர்ற போட்டிதான். இந்தப் புது ஆஸ்பத்திரி வேகமாக முன்னுக்கு வந்துடுச்சில்ல... அது எவனுக்கோ பொறுக்கலை. அதான் ஒரு டாக்டரைப் பழிதீர்த்து இந்த ஆஸ்பத்திரின்னாலே எல்லோரும் மிரளணும்கிற அளவுக்குப் பண்ணியிருக்கான்!"

"அப்படியா சேதி! காலம்தான் என்னமா கெட்டுக்கிட்டு வருது பார்த்தியா. சொல்லடி பட்டாலும் கண்ணடிபடக்கூடாது தாயி!"

நித்யநோயாளியாய் மாதக்கணக்கில் படுக்கையில் இருக்கும் இரண்டு பேரிடம் மேல் மாதிரி குசுகுசுப்பு வேறு. அவர்களுக்கு மத்தியில் கேஸ்ஷீட் பார்த்து, அதில் எதையோ எழுதியபடி அமிர்தவல்லி!

'பளீர்' வெளுப்பில் மிகப் பிரகாசமாய், சிக்கென்ற கொண்டையோடும் நர்ஸ் வகையறாக்களில் நான் ஒரு தேவதை என்கின்ற அழகோடும் வார்டுகளை அவள் வலம்வரும் அந்தப் பதினோரு மணிக்கு, ஆபீஸ்பாய் பத்தினம் அவளைத் தேடிக்கொண்டு வந்தான்.

"சிஸ்டர், உங்களுக்கு போன் வந்துருக்கு" என்றான்.

"எனக்கா? போனா?" அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள். அவன் உறுதியாக 'ஆம்' எனவும் அவனைப் பின்தொடர்ந்தாள்.

சீஃப் டாக்டர் கலாதரின் அறைக்குப் பக்கத்தில் ஒரு வொார்க். ஒரு டைப்பிஸ்ட், ஒரு கேஷியர் என்று கட்டுப்பாடான சிறிய அறையில் சீஃப் எம்.என்.ஓ. நடராஜனின் மேஜைமேல் ரிசீவர் தனித்து அமர்ந்திருந்தது.

அதை எடுத்து 'ஹலோ' என்று அதனுள் குரலை நுழைத்தாள்.

"சிஸ்டர் அமிர்தவல்லியா?"

"ஆமா! நீங்க யாரு?"

"மேடம், நான் ஒரு ஆட்டோ டிரைவர். உங்க மதர் என் ஆட்டோவுல கடைத்தெருவுக்கு வந்துக்கிட்டிருக் கச்சே திடீர்ன்னு ஹார்ட் அட்டாக் வந்துடுச்சு! அவசரத் துக்கு உடனேயே அவங்களை வாங்லிரோடு கௌசல்யா நர்சிங்ஹோமுக்கு எடுத்துக்கிட்டு வந்திருக்கேன். இப்ப அவங்க நல்லா இருக்காங்க. இருந்தாலும் ஜாக்கிரதையா ட்ரீட்மெண்ட் கொடுத்துப் பார்க்கணும். அவங்க மூலமா தான் எனக்கு உங்க போன் நம்பர் தெரிஞ்சுது. உடனே கிளம்பி வர்றீங்களா?"

போனை வைத்துவிட்டு, நம்பமுடியாதபடி துடிப்பும் தவிப்புமாய் உருமாறினாள் அமிர்தவல்லி.

"என்ன சிஸ்டர் எனிதிங் ராங்?" - இது நடராஜன்.

"யார்னே தெரியலை... ஒரு ஆட்டோ டிரைவர்னு சொன்னான். எங்கம்மாவுக்குத் திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்து கௌசல்யா நர்சிங்ஹோம்ல அட்மிட் பண்ணியிருக் கிறதா சொல்றான் சார்."

"அப்படியா? உடனே கிளம்பிப் போய் பாரும்மா..."

"அது இல்ல சார்! எங்கம்மா கடைத்தெருவுக்குப் போக வேண்டிய அவசியமே கிடையாது. அப்படிருக்க, எதுக்குக் கடைத்தெருவுக்குப் போகணும்? அப்படியே போனாலும் நடந்து போகாம ஆட்டோவுல ஏன் போகணும்?"

"ஏம்மா, இது என்ன ஆராய்ச்சி பண்ற நேரமா? கௌசல்யா நர்சிங்ஹோமுக்குப் போய் பார்த்துட்டா உண்மை தெரிஞ்சிடுது."

சரி என்று லீவ் எழுதிக் கொடுத்துவிட்டு, வழவழ வெங்காயச் சருகுச் சேலையில் கிளம்பினாள். கிளம்பும்

பரவ கொஞ்சம் எச்சரிக்கையாக அவள் மூளையில் சிவப்பு விளக்கு எரிந்தது!

ஒரு ஆட்டோ பிடித்து நேராக வீட்டுக்குப் போய் பார்த்துவிட்டு, பிறகு கௌசல்யா நர்சிங்ஹோம் போனா என்ன?

பிரியத்துக்குரிய டாக்டர் விஸ்வநாத்தின் மரணத்துக்குப் பிறகு காபி, டீயைக்கூட சந்தேகத்துடன் பார்ப்பிடும் பயம் அந்த நர்சிங்ஹோமில் எல்லோருக்குமே வந்துவிட்ட நிலையில், அமிர்தவல்லி இப்படி நினைத்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆஸ்பத்திரிக்கு வெளியே அவன் தயாராக ஆட்டோவில் இருந்தான். அதில் ஏறிக்கொண்டாள்.

"அம்பாயிரம் சாவடித் தெருவுக்குப் போ. பாவடி வள்ளிக்கூடம் பக்கத்துல" என்றாள் அமிர்தவல்லி.

அவன் உடனேயே எடுத்தான்.

ஆட்டோவை அளவுக்கு அதிகமான கோபப்படுத்தி வராமல்.

அதுவேறு ஒரு பாதையில் பிரிந்தது.

"மிஸ்டர், இந்தப் பக்கம் இல்ல, எங்க தெரு!"

"தெரியுங்க. வண்டியில் சின்ன பிராப்ளம். மெக்கானிக்கிட்ட போறேன். அஞ்சு நிமிஷம்தான் ஆகும்... ப்ளீஸ்!"

"என்னங்க இது, என் அவசரம் தெரியாம?" சலித்துச் சிலுசிலுங்கினாள் அவள்.

மார்பிரண்டும் அந்தச் சிணுங்கலில் வெகு அழகாய் குலுங்கியது. அவன் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

சருகுச்சேலை அப்பட்டமாய் அந்தக் கோளங்களைக் காட்டியதற்காக மனதுக்குள் அதற்கு நன்றி சொன்னான்.

ஆட்டோ மரவனேரியின் ஆளரவமற்ற அகண்ட எக்ஸ்டென்ஷன் தெருக்களில் ஓரிடத்தில் 'முடியாதுய்யா இனி என்னால!' என்றபடி நின்று கொண்டது.

அவள் கோபத்துடன் ஆட்டோவைவிட்டு இறங்கினாள்.

"ஏய்யா தகர டப்பாவுக்கெல்லாம் ஆட்டோன்னு பேரை வெச்சு பேசஞ்சர் உயிரை வாங்குறீங்க?" என்றாள்.

ஆட்டோ நின்று போன இடத்துக்கு அருகில் இடிந்துபோன ஒரு வீடு. அவன் அதற்குள்ளே எதுவும் பேசாமல் நுழைந்தான்.

"ஏ மிஸ்டர்! என்னய்யா நடுத்தெருவுல என்னை நிறுத்திட்டுப்போறே?" அவள் கேட்டுக்கொண்டே அவன் பின்னே செல்ல, அவன் வீதியைச் சட்டென்று ஒரு பார்வை பார்த்துவிட்டு, வெடுக்கென்று அவள் கையைப் பிடித்து அந்த இடிந்த வீட்டுக்குள் இழுத்துச் சக்கென்று வாயைப் பொத்தினான்.

அவள் திணறியபடியே மயங்கத் தொடங்கினாள். அந்த இடிந்த வீடு தப்புத்தண்டாக்களுக்குத் தோதா இருட்டிக் கொண்டும் பயங்கரமாகவும் இருந்தது.

மயங்கிய அவளை அப்படியே சுவர் ஓரமாகக் கிடத்தினான்.

மார்பின்மேல் படர்ந்திருந்த சருகுச்சேலையை உரித்தான்.

ரவிக்கை கொக்கிகளை விலக்கி, நாயுடுஹால் அருகே வரவும் சட்டென்று பின்வாங்கினான். கொஞ்சம் பின்னால் போய் அவளைச் சில வினாடி ரசித்தான். பிறகு திரும்பத் தெருவுக்கு வந்தான்.

சரியாக ஐந்து நிமிடத்துக்கு ஆட்டோவைப் பிரித்துப் போட்டுக் குடையத் தொடங்கினான்.

'இப்பப் போய் உனக்கு ரிப்பேர் பண்ணத் தோணுதே முண்டம்! போய் அனுபவிடான்னா...' அவனது பலப்பல மைல் நீள இரத்தக்குழாய் சூடாகி மூளையைத் தொந்தரவு பண்ணவும் அது அவனுக்குக் கட்டளையிட்டது.

'எல்லாம் ஒரு பாவ்லதான்!' மூளைக்குப் பதில் சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போனான்.

நாயுடுஹாலையும் விலக்கினான்.

அவனது கண்ணிரண்டும் தகத்தாயமானது.

அப்படியே குனிந்து மேடுகளில் உதட்டைக் குவித்தான்.

பின்னர் கிறக்கமாகப் பார்வையைக் கீழே ஓட்டி, தொப்புளைப் பார்த்து அதன்மேல் தனது சுட்டுவிரலை வைத்து அழுத்தமாகச் சுழி போட்டான்.

அமிர்தவல்லியின் மயக்கம் அரை மயக்கமாகி உடம்புச் சிலிர்க்கும்போல் தோன்றியது.

ஒன்பதாய் மடங்கிய சேலைக்கொசுவம் அவனை உபத்திரப்படுத்தவே அதையும் உருவினான்.

இன்னொரு தடையாய் உள்பாவாடை!

"பொம்பளைன்னாலே மாயாஜாலப் படம் மாதிரி எவ்வளவு சுவாரஸ்யம்!" - முனங்கலோடு அதையும் விலக்கிவிட்டு-

"இதுக்கு மேலயும் ஏதாவது இருந்துச்சுன்னா நான் பொல்லாதவனாயிடுவேன்" - முனங்கலோடு அதையும் விலக்கிவிட்டு -

எல்லாம் முடிந்த பிறகு ஞாபகமாக பின்பாக் கெட்டில் ஒளிந்திருந்த பர்ஸைப் போன்ற மெலிதான கையலக சதுர டப்பாவை எடுத்துத் திறந்தான். இஞ் ஜெக்ஷன் சிரிஞ்சு!

அதைக் கொண்டு மூன்று முறை மூன்று இடங்களில் வைத்து பதினைந்து சி.சி. விஷத்துளிகளை அவளுக்குள் கலந்துவிட்டு எழுந்தான்.

திரும்பவும் ஆட்டோவை நெருங்கி, பிடுங்கிப் போட்டவற்றைச் சரிப்படுத்தி ஒரு உதை உதைக்க, 'நான் ரெடி' என்றது ஆட்டோ.

'வீதின்னா இப்படித்தான் இருக்கணும் கொலை நடந்தாலும் வெளியே தெரியாதுங்கறதுக்கு இலக்கணமா' அவன் பாராட்டுதலோடு ஆட்டோ சிட்டாய் பறந்தது.

அவசியம் பேப்பர் பார்க்க வேண்டும் என்றது புத்தி.

ஆட்டோவின் உபயோகமும் போதும் போலத் தோன்றியது.

ஜங்க்ஷனில் டிரைவர் டீயடிக்கச் சென்ற சமயத்தில் ஒண்ணரை மணி நேரத்துக்கு முன்பாக அதைக் கடத்தி யதும் ஞாபகத்துக்கு வந்தது.

அப்படியே அதைச் சாலை ஓரமாக விட்டு நடக்க ஆரம்பித்தான். பெட்டிக்கடை ஒன்றில் சிகரெட்டும் பேப்பரும் வாங்கிக்கொண்டான்.

எதிர்பார்த்தபடியே பேப்பரில் விஸ்வநாத் கொலைச் செய்தி!

செய்தியின் முடிவில் ஷீலா பஸ் ஸ்டாண்டில் குறிப்பிட்ட பஸ் நிற்கும் இடத்தில் போய் படுத்துக் கொண்டதைப் படித்துவிட்ட பயங்கர பரபரப்பிற்குள் ளானான்.

"பொட்டை நாயே, ஏது ஒழுங்கா சரியான இடத்துக்கு வந்துட்டே!" வாய்விட்டு ஆச்சரியமானவன், விஸ்வநாத்தை வழியனுப்பிவிட்டு நேராக அங்கே பஸ் ஏறியதை நினைத்துப் பார்த்தான். அயோத்தியாபட்ட ணத்தில் இறங்கிக்கொண்டு, ஓட்டல் நாகமணியைத்

சாரதா மயக்கமானாள்.

"ஐயய்யோ... நான் இப்போ என்ன பண்ணுவேன்! என் மருமகள் மயக்கமாயிட்டா- ஓடிவாங்க- ஓடிவாங்க..!"

சித்தபிரமை பிடிக்கும்போல இருந்தது கைலாசத்துக்கு. வீட்டு வேலைக்காரர்கள் ஹாலுக்குப் பாய்ந்து வந்தனர்.

"டாக்டர் ராஜலட்சுமிகிட்ட எடுத்துக்கிட்டு போங்க சீக்கிரம்!" அதட்டலாய் உத்தரவு போட்டுவிட்டு ராஜலட்சுமிக்கு போனைக் கழற்றினார்.

"ஹலோ, டாக்டர் ராஜலட்சுமி?"

"யெஸ்..."

"நான் கைலாசம் பேசறேன். ரொம்ப டிஃபிகல்டான டைம்ல இருக்கேன். என் மருமகள் சாரதா திடீர்ன்னு மயக்கமாயிட்டா. அவளுக்கு அபார்ஷன் ஆயிடப் போவுது. அவளை இப்ப உங்க நர்சிங்கோமுக்கு என் வேலைக்காரர்கள் கொண்டுகிட்டு வராங்க. ஜாக்கிரதையா கவனிங்க. செலவைப்பத்தி கவலையில்லை. என் சந்ததி இப்ப உங்க கைல. ப்ளீஸ்..."

அவர் பேசி முடிக்கவும் சாரதாவைச் சுமந்து கொண்டு ராஜலட்சுமி நர்சிங்ஹோமுக்குக் கிளம்பவும் சரியாக இருந்தது.

அடுத்து, "தெய்வமே" என்று முனங்கியபடி ருத்ராவுக்கு போன் போட்டார். விவரம் முழுவதையும் சொன்னார்.

"நீங்க ஏன் இன்னிக்கே பணம் தரேன்னு ஒப்புக்கிட்டீங்க?" ருத்ரா சங்கடத்துடன் கேட்டார்.

"என்ன பேசறீங்க ருத்ரா, என் நிலை தெரியாம... பிரசாத்தையே அவன் கடத்திக்கிட்டுப் போய்ட்டான் தெரியுமா?"

"நிஜமாவா?"

"பொய் சொல்ற நேரமா இது...? நான் அஞ்சு மணிக்குக் கிளம்பறேன் பணத்தோட. மத்ததெல்லாம் கடவுள் கைல. என் மகன் மட்டும் எனக்குக் கிடைக்கலைன்னா அப்புறம் நடக்கறதே வேற..."

"ரொம்ப பதற்றப்படாதீங்க. நாங்க விட்டுட மாட்டோம். கவலைப்படாதீங்க. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்."

கைலாசம் காரை ஸ்டார்ட் செய்யும் சமயம், திடும்மென்று எதிர்பட்டான் ஜெயக்குமார்.

"என்ன ஜெயக்குமார்?"

"பணத்தோட கிளம்பிட்டீங்களா?"

"பின்ன?"

"ஒரு நிமிஷம் பணத்தோட சீரியல் நம்பரை நோட் பண்ணிக்கறேன்!"

"எதுக்கு?"

"எல்லாம் ஒரு தற்காப்புக்குத்தான்."

"சரி... சரி... சீக்கிரம்..."

அவன் நோட் பண்ணிக்கொண்டான். கைலாசம் காரைக் கிளப்பிக்கொண்டு பறக்க ஆரம்பித்தார்.

தொலைவில் ஏரி தெரிந்தது. கடிகாரம் ஐந்தே முக்காலைத் தொட்டது. இன்னும் ஆறு கிலோமீட்டர். அவரது குவாலீஸ் ஜாங்கிரியில் ஒழுகும் ஜீராவாய் பறந்தது.

'ஆறு மணி!

எட்டியாயிற்று ஜான்சன் எஸ்டேட்டை!

'அதோ கருமருதுக்காடு.... அப்பப்பா என்ன அடர்த்தி!'

'எங்கே அந்தக் குட்டி அருவி?'

'அதோ... அதோ... பளிங்கு போல் சலசலப்பாக பருவப்பெண்ணைப் போல பளபளப்பாக..'

சுற்றும்முற்றும் பார்த்துக்கொண்டே பெட்டியை ஓடும் நீரில் எறிந்தார்.

"உப்பிலி, நீ சொன்ன மாதிரி செஞ்சிட்டேன். எங்கே என் மகன்?" ஓங்கலாக அடுத்த வினாடி கத்தினார். காடெங்கும் எதிரொலித்தது அந்தக் குரல்.

"பத்து நிமிஷத்துல வந்துடுவான்!" ட்தில் எதிரொலி.

பதில் வந்த மறுநிமிடம் ஒவ்வொரு மரத்துப் பின்னாலிருந்தும் கைலாசத்துக்கு மட்டும் தெரியும்படி போலீசார் எழுந்தனர்.

லீடிங்கில் ருத்ரா.

அவரும் பிரசாத் வரட்டும் என்பது போல் விவேகமாகக் காத்திருப்பது கைலாசத்துக்குப் புரிந்து அவரது இதயத் துடிப்பு திரும்பச் சரியானது.

பத்தாவது நிமிடம் அந்தக் காடே அதிரும்படி ஏதோ வெடிக்கும் சப்தம் கேட்டது.

சப்தத்தைத் தொடர்ந்து கரும்புகை குப்பென அந்தக் காட்டையே சுற்றி வளைத்தது.

ருத்ரா வினாடிகளை வீணாக்காமல் சப்தம் கேட்ட பக்கமா ஓடினார். ஒவ்வொரு போலீசும் சப்தம் வந்த திக்கை மையமாகக் கருதி ஒரு வளையம் போல் சுற்றி வளைக்கத் தயாராயினர்.

"ருத்ரா- என் மகனைக் காப்பாத்துங்க- என் மகனைக் காப்பாத்துங்க..." கைலாசம் காடே அதிரும்படி கத்துவது ருத்ரா காதுகளில் விழுந்து, அவரை மேலும் வேகப் படுத்தியது.

காக்கிச்சட்டை அணிந்த மானுட சரீரங்களைச் செடியும் கொடியும் உரசிக் காயப்படுத்தும் அந்தக் கடுமையான வேளையில், வேகமாக வந்த இரவுப் பொழுது வேறு அவர்களைக் கவிழ்க்கப் பார்த்தது.

ருத்ராவுக்கு எங்கே தான் தோற்றுவிடுவோமோ என்னும் பயம் அவர் மென்னியைப் பிடித்தது. அதோ அந்த வெடிச்சப்தம் கேட்ட இடம்...

திகுதிகு என நெருப்பு எரிந்துகொண்டு...

பக்கமாய் நெருங்கி பிறகே புரிந்தது. கார் ஒன்று எரிந்துகொண்டிருக்க டிரைவிங் சீட்டில் ஒரு உருவம் கருகிக் கொண்டிருக்க...

"அது பிரசாத்தா, இல்லை உப்பிலியா?"

ருத்ரா காரை வேகமாக நெருங்கினார். நெருப்புச் சுடரில் சூழலே ஒளிமயமாகத் தெரிய, பக்கத்தில் பாதத்தில் மிலீரிட்டது ஜான்சன் எஸ்டேட் கருமருதுக் காட்டு குட்டி அருவியின் ஓட்டம்!

குனிந்து கைகளால் நீரைக் கொண்டு எரியும் சடலத்தின் மேல் தெளித்தபடி கிட்டே நெருங்கினார். சடலத்தை வேகமாக எட்டி உதைத்துக் கீழே விழ வைத்துவிட்டு முகத்தைப் பார்த்தார்.

சுற்றி வந்த போலீசார் தாமதிக்காமல் எரியும் காரை அணைக்கப் போராடினார்கள்.

ருத்ரா பார்த்த முகம் கருகிச் சின்னபின்னமாகி...

நல்லவேளை! இடதுகை மட்டும் கருகாமல் 'ய ப்பிலி!' என்று பச்சை குத்திய எழுத்துக்களை காட்டி நின்றது!

அப்பாடா! ஆமாம், பிரசாத் எங்கே? கேள்விகள் எழுந்தபோது பார்ச்சலட் உதவி தேவைப்பட்டது.

நல்ல உயிரோட்டமான டார்ச்லைட்டை தயாராக வைத்திருந்தார். அதை அடித்துச் சுற்றும்முற்றம் பார்க்கவும் ஒருபுதர் அருகே மயக்கமாய் பிரசாத்!

ஓட்டமாய் அவனை நெருங்கி, அவன் மார்பில் காதுகளை வைத்துப் பார்த்துவிட்டு உற்சாகமாகக் கத்தினார் ருத்ரா.

"மிஸ்டர் கைலாசம், டோண்ட் ஒர்ரி... பிரசாத் இஸ் சேஃப்."

அந்தச் சப்தம் எதிரொலி அலைகளாய் காடு முழுக்கப் பரவி, கைலாசத்தையும் எட்டி, அவரைத் தூக்கி நிறுத்தியது.

அடிவாரத்தில் நிலைகொள்ளாத தவிப்பில் கையில் துப்பாக்கியோடு ஜெயக்குமார், பக்கத்து போலீஸ் ஜீப்பில் இரைச்சலாக வயர்லெஸ்.

"ஒருவேளை எங்களால் அவனைப் பிடிக்க முடியாம போனா, அவன் இந்த வழியாதான் கீழே வந்தாகணும். மேலே இருந்து வர்ற வாகனங்களை ஒண்ணுவிடாம செக் பண்ணு. பய தப்ப முடியாது."

"உப்பிலியை எனக்கு அடையாளம் தெரியாதே! எப்படிக் கண்டுபிடிக்க?"

"அதான் கைலை பச்சை குத்தியிருக்குமே?"

"அதை அவன் சாமார்த்தியமா மூடி மறைக்கலாம்?"

"கைலாசம் கொடுக்கப் போற பணம் இருக்குமே. அந்தப் பணத்தோட நம்பர்களை நோட் பண்ணி வெச்சுக்கோ. ஒப்பிட்டுப் பார்த்துக் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும். நானும் உனக்கு வயர்லெஸ்ல அவன் தப்பிச்சுட்டா உடனே தகவல் தரேன்" என்று ருத்ரா சுமார் நாலுமணி அளவில் இட்ட கட்டளைக்குத் தோதாக

அடிவாரத்தில் காவலுக்குப் போலீசோடு நிற்கும் அவனை, வாக்கிடாக்கி மூலம் ஒரு வழியாக ருத்ரா அழைத்தார்.

"என்ன சார், என்ன ஆச்சு?"

"எல்லாம் நல்லபடியா முடிஞ்சுது. ஆனா, எதிர் பாராத விதமா உப்பிலி இறந்துவிட்டான். பிரசாத் தப்பிச்சுட்டான்."

"வெரிகுட்! எப்படி சார்?"

"பாடியோட இப்ப கீழேதான் வந்துக்கிட்டு இருக்கேன். நேர்ல சொல்றேனே..."

மேலே...

ஏற்காட்டின் ஏரி வளையில் வரிசையாகக் கீழிறங்கிக் கொண்டிருந்தன போலீஸ் ஜீப்புகள்!

பிரசாத் மயக்கம் நீங்கியிருந்தான். ருத்ராவும் கைலாசமும் ஒருவரை ஒருவர் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். கைலாசம் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் விதமாக அவரது கைகளை நன்றி பொங்க பிடித்து வாஞ்சையாக வருடிவிட்டார்.

"என் மருமக தாலிபாக்கியம், என் மகன் தப்பிச்சுட்டான்" என்றார்.

"மிஸ்டர் பிரசாத், என்ன நடந்ததுன்னு உங்களால சொல்ல முடியுமா?" ருத்ரா மெல்ல பக்குவமாக இதமான குரலோட்டத்தோடு விஷயத்துக்கு வந்தார். பிரசாத் முகத்தை நிமிர்ந்து தீர்க்கமாகப் பார்த்தான். ஒரு சோகமான கதையைச் சொல்லப் போகிற பாவனையை முகத்தில் பிரதிபலிப்பவனாய் உதட்டைப் பிரித்தான்.

"லீவ்ல ரொம்ப அடைஞ்சு கிடக்கிறோமேன்னு வெளியில போய் கிளம்பினேன். எப்ப நான் வெளியே கிளம்பி வர்றது? என் ஃபியட் காரைத்தான் எடுத்துக்கிட்டு

போவேன். இது உப்பிலிக்குத் தெரிஞ்சிருக்கு. ஏதேச்சையா என் காரைத் கடைத்தெருவில் உப்பில் பார்த்துட்டு என்னைத் தொடர்ந்து வந்தான். ஓட்டல் சங்கீத்ல நான் காப்பி சாப்பிடறச்சே என் கார்ல ஏறி படுத்துட்டான். இது தெரியாம நான் காப்பி சாப்பிட்டு வந்து காரை ஸ்டார்ட் செஞ்சேன்.

கார் கொஞ்சம் நகரவும் பின்பக்கமாகக் கத்தியோட நிமிர்ந்தான் உப்பிலி. அப்புறமா என் காரிலேயே ஏற்காடு வரைக்கும் வந்து, காப்பி எஸ்டேட்டுக்கு நடுவுல இருக்கிற வீட்டுக்குள் என்னை அடைச்சு வெச்சுட்டு, அப்பாகிட்ட பேரம் பேசினான். அப்பா எப்படியும் பணத்தோட வருவார்ன்னு எனக்குத் தெரியும். அதே சமயம் நீங்களும் வந்துடுவீங்கணும் தெரியும். உப்பிலியோட எண்ணம் பணம் கைக்கு வந்தவுடன் வெடிகுண்டுகளை வீசி, கவர் பண்ற போலீசை பிளாக் பண்ணணும் கறதுதான்! அப்படியே என்னையும் கொன்னு என் ஃபியட்லேயே தப்பிச்சுடணும்கறது அவன் எண்ணம்.

அதுக்குத் தகுந்த மாதிரி கார்ல தயாரா உட்கார்ந்துகிட்டு அருவியில் மிதந்து வர்ற பணப்பெட்டியை என் கையாலேயே எடுத்து தரச் சொன்னான். தந்தேன். தந்த உடனேயே காரை ஸ்டார்ட் பண்ணி ரெடியா நிறுத்திகிட்டு வெடிகுண்டைத் தூக்கி மேலே எறிஞ்சான். நான் அதை கேச் பிடிச்சு சாமர்த்தியமா ஓடப்போன அவன் கார் மேலே எறிஞ்சேன்.

அப்படி எறிஞ்சதும் கார் தீப்பிடிச்சு வெடிச்சது. அதுல அவன் பலியாகிட்டான். பணமும் கருகிச் சாம்பலாயிடிச்சு. அதைப் பார்த்த நான் மயக்கமாயிட்டேன். அப்புறம் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே!"

பிரசாத் சொன்ன விஷயங்கள் ருத்ராவைக் கசக்கியிருந்தன.

"பணம் போனா போகட்டும். நீ பொழைச்சி யேப்பா... அதுவே போதும்" என்று அவனைக் கட்டிக் கொண்டார் கைலாசம்.

கரிக்கட்டையாக மாறிவிட்ட உப்பிலி ஒரு ஜீப்பில் சீட்டுக்குக் கீழே அகோரமாகக் கிடந்தான்.

அடிவாரத்தை அனைத்து ஜீப்புகளும் எட்டிச் சமநிலத்தைத் தொட்டுச் சீறின. ஜெயக்குமார் ருத்ராவின் ஜீப்பில் ஏறிக்கொண்டான். கைகுலுக்கி அவருக்குத் தனது பாராட்டுதல்களை முதலில் தெரிவித்தான்.

"பிரசாத்தையும் பாராட்டு ஜெயா. துணிச்சலா வெடிகுண்டை காட்ச் பிடிச்சுத் திருப்பி எறியலேன்னா எல்லாமே தலைகீழாக மாறியிருக்கும்!" என்றார் ருத்ரா. ஜெயக்குமார் பிரசாத்தின் கைகளையும் பிடித்துக் குலுக்கினான். அப்படியே நடந்ததை ருத்ரா ரசனையோட சொல்ல அதைக் கேட்டு திகைப்பு, பரவசம் என்று எல்லா உணர்வுகளையும் முகத்தில் காட்டினான்.

"மிஸ்டர் ருத்ரா, மிஸ்டர் ஜெயக்குமார், உங்க இரண்டு பேருக்கும் நான் எவ்வளவோ கடமைப்பட்டி. ருக்கிறேன். அவசியம் என் வீட்டுக்கு விருந்துக்கு நீங்க வரணும்!" கைலாசம் திரும்பவும் ருத்ரா கையைப் பிடித்துக் கொண்டார்.

"சார், இந்த கேஸ் இன்னும் முடியலை. நிறைய போலீஸ் சம்பிரதாயங்கள் பாக்கி இருக்கு. எல்லா விவகாரமும் தீரட்டும். விருந்துக்கென்ன... வந்து சாப்பிட்டுட்டா போச்சு..." என்றார் ருத்ரா.

சர்வ் போலீஸ் மைதனாத்தில் ஜீப்புகள் தற்காலிக மாக நிறுத்தப்பட்டு, ஜெயக்குமார் ஜீப்பைவிட்டு இறங்கி வந்து

"சார், உப்பிலி பாடி எந்த ஜீப்ல இருக்கு?" ருத்ராவை ஆவலோடு கேட்க, ருத்ரா ஜீப்பைச் சுட்டிக் காட்டினார்.

வேகமாகச் சென்று தங்களுக்குத் தண்ணிகாட்டிய அந்த நண்பனின் உடலைப் பார்த்து முதலில் வேகமாக முகத்தைத் திருப்பிக்கொண்டான். என்ன நினைத்தானோ பிறகு ஆழமாக ஊன்றினான்.

உப்பிலி என்று பச்சைகுத்தி அந்தக் கரம் மட்டும் அவ்வளவாக கருகியிராமல் மற்ற பரப்பெல்லாம் நன்றாகக் கருகியிருக்க, அந்த பச்சைகுத்திய இடதுகரத்தில் கட்டை விரலைக் காணோம்! உடனேயே அவன் நினைப்பில் பஸ்ஸில் சந்தித்த முத்துசாமி தலைதூக்கினான்.

'ஒரு தீவிபத்தில் இப்படிக்கூட பாரபட்சமாய் கருகுமோ?' என மின்னலாய் வெட்டிய கேள்வியில் எட்டிய தூரம் விடையைத் துழாவினான்.

ருத்ரா. எஸ்.பி. ஆபீசுக்குச் செல்வது தொடர்பாக நடந்துமுடிந்த வீரப் போராட்டம் பற்றி கித்தாப்பாக அந்த போலீஸ் சர்க்கிளில் பேசிக்கொண்டிருந்தார்.

அவரைப் பார்க்க திடும்மென்று அவனுக்குக் கவலையானது.

வேகமாக ருத்ராவை நெருங்கிக் காதைக் கடித்தான்.

ருத்ரா முகம் ஜீரணிக்க முடியாத விதமாய் கறுத்து, இருண்டு எல்லாமுமாய் ஆனது!

18

யாரோ சொன்னாங்க... என்னன்னு?

ஊசியின் காதுக்குள்ளே
ஒட்டகம் நுழைஞ்சாச்சு!
ஒட்டகத்தின் காதுக்குள்
உண்மை மட்டும்

சாரதாவுக்கு நல்லவேளையாக அபாயகரமாக ஒன்றும் ஆகியிருக்கவில்லை.

டாக்டர் ராஜலட்சுமியின் தீவிரக் கண்காணிப்பும் இயல்பான அவளது மனோதிடமும் அவளைத் தாய்மை நிலையில் தக்க வைத்திருந்தன.

கைலாசம் வந்து நன்றி சொல்லிவிட்டு அவளை அழைத்துச் சென்றார். காரின் பின்சீட்டில் உட்கார்ந் திருந்த பிரசாத், அவள் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வரவும் காரின் கதவைத் திறந்துவிட்டான். அவள் அவனைப் பார்த்தவுடன் இறுகக் கட்டிக்கொண்டு விசும்பி விசும்பி அழுதாள்.

அவன் முதல்வேளையாக அவள் வயிற்றை வருடி, பார்வையாலேயே 'ஒரு ஆபத்தும் இல்லைதானே?' என்று கேட்டான். அவள் சந்தோஷமாகத் தலையை அசைத்தாள். அவன் கண்களை மூடி தெய்வத்திற்கு நன்றி சொன்னான்.

எதேச்சையாகத் திரும்பிய கைலாசமும் இதைப் பார்த்துக் கண்கலங்கினார். இருவரின் அன்னியோன்னிய மான நெருக்கம் குறித்த நெகிழ்ச்சியில் ஏக நாட்களுக்குப் பிறகு உடலும் இலேசாக அவரும் நன்றியோடு கை குவித்து வணங்கத்திலும் போட்டுக்கொண்டார்.

விரட்டலாய் வந்த போலீஸ் ஜீப்பைப் பார்த்து, அந்தக் கிராமத்து மயானத்து வெட்டியான் வீரமுனி பதுங்கத்துப் போனான்.

நின்ற ஜீப்பிலிருந்து இரண்டு அரைடிராயர் காக்கி சட்டை போலீஸ்காரர்கள் மண்வெட்டி சகிதம் இறங்கவும் அவன் நெஞ்சு படபடத்தது. தன்னை இரண்டால் பெருக்கிக்கொண்டது.

விஜயக்குமார் வெட்டியான் அருகில் போய் "முதுமையாளியைப் புதைத்த சமாதி எது?" என்று கேட்க, வெட்டியான் சமாதி அருகே அழைத்துச் சென்றான்.

அந்தச் சமாதியை வந்திருந்தவர்கள் தோண்டித் துழாவ ஏறத்தாழ பத்து அடி தோண்டியும் முத்து சாமியின் சவத்தைக் காணவில்லை.

"சாதாரணமா அஞ்சு அடிக்குமேல பொணத்துக் கெல்லாம் குழி தோண்டறது கிடையாதுங்க" என்றான் வீரமுனி.

அதைக் கேட்டு ருத்ரா அளவிற்கதிகமாகக் கலவரப் பட்டார்.

"இன்னுமா சார் உங்களுக்குச் சந்தேகம்? ஷீலா அன்று இந்தச் சுடுகாட்டுக்கு வந்தப்போ கொலைகாரன் இங்க வந்திருப்பான்னு மட்டும்தான் நெனைச்சோம். இப்போ எதுக்குன்னு தெரிஞ்சு போச்சா?"

"நீ என்ன சொல்றே ஜெயா...?"

"உப்பிலி சாகலை! எமகாதகன். உப்பிலி குற்றங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, நம்பளை டபாய்க்க முத்து சாமி சவத்தை உப்பிலியாக்கிவிட்டு தப்பிவிட்டான்."

"கைல பசச்சையெல்லாம் குத்தியிருந்ததே?"

"அது மட்டுமா, அந்தப் பகுதி மட்டும் நெருப்புல் வேகாம இருந்ததைக் கவனிச்சீங்களா?"

"நெருப்போட தன்மையைப் பொறுத்துதானே வேகும்?"

"ஐயோ சார்? இன்னும் என்னை மறிக்கிறீங்களே... நான் முத்துசாமியை நேர்ல பார்த்தவன். அவனுக்கு இடதுகைல கட்டைவிரல் கிடையாது. அதை வெச்சுதான் நான் அவனை அடையாளம் கண்டுபிடிச்சேன். தீர்மான மாகச் சொல்றேன். உப்பிலி சாகலை. தப்பிவிட்டான்!"

ருத்ரா தலையைச் சிலிப்பிக்கொண்டு பெருமூச்சு விட்டார்.

"ஜெயா, நீ சொல்றதை என்னால ஜீரணிக்க முடியலை" என்றார்.

"அந்த அளவுக்கு நாம ஏமாந்துட்டோம் சார். எப்படி ஜீரணிக்க முடியும்?" என்றான் ஜெயக்குமார்.

"அப்ப உப்பிலி எங்கே?"

"அதைத்தான் நாம கண்டுபிடிக்கணும்!"

"என்ன ஜெயா இது, நிம்மதியா மூச்சுவிட முடியாம?"

"ஆமா, இன்னுமா நீங்க பிரசாத் சொன்ன கதையை நம்பறீங்க...?" - தன் பேச்சில் ஜெயக்குமார் பிரசாத்துக்கு கொக்கி மாட்டவும் மேலும் குழம்பினார் ருத்ரா.

"அவனை எதுக்கு இப்ப இழுக்கறே...?"

"அவனை இழுக்கலேன்னா இந்த கேஸ் முடியாதே!"

"புரியம்படி சொல்லு!"

"உப்பிலி தப்பிவிட்டான். அதுக்கு பிரசாத் உடந்தை. உப்பிலியை நேர்ல பார்த்திருக்கிற ஒரு நபர் பிரசாத். பிரசாத் முத்துசாமி பாடியை உப்பிலின்னு சொன்னது பொய். உப்பிலி பணத்தோட தப்பிவிட்டான். அது மட்டுமல்ல; வெடி வெடிச்ச இரண்டு மூணு நிமிஷத்துல நீங்க காரை நெருங்கிட்டீங்க. அந்தக் குறுகின கால அளவிலான தீ விபத்துல ஒரு உடல் இவ்வளவு கருக முடியாது. உங்களுக்கு இன்னொரு தகவல் தரேன். முத்துசாமிக்குப் போனவாரம் தொடையில எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கு. இப்போ பாடியை செக் பண்ணினா நான் சொன்னது உண்மைன்னு ஊர்ஜிதமாகிவிடும்."

"சரி ஜெயா... உன் கணக்குப்படி இப்ப நம்பகிட்ட இருக்கற பாடி முத்துசாமி பாடின்னே வெச்சுப்போம். அவரை மிரட்டி, பணம் பறிக்கத் திட்டம் போட்ட உப்பிலியோட பிரசாத் எப்படி உடன்பட்டுப் போயிருக்க முடியும்?"

"சரியான கேள்வி. உப்பிலி எப்படித் தப்பினாங் கறதைவிட இதுதான் ரொம்ப முக்கியமா ஆராயப்பட வேண்டிய கேள்வி. ருத்ரா சார், கேஸ் இதுவரைல கண்ணாமூச்சிதான் ஆடியது. இப்பதான் சுயரூபத்தைக் காட்டியிருக்கு. நாம யாருங்கறதை இனிதான் புரிய வைக்கணும்."

"டிபார்ட்மெண்ட்ல ஃபைலை குளோஸ் பண்ண ணும்னு சொல்லிக்கிட்டிருக்காங்க. எல்லாம் அந்த கைலாசத்தோட பிரஷர். இப்போ போய் எப்படி கேஸை டைவர்ட் பண்றது?"

"எஸ்.பி. கிட்ட விரிவாக கலந்து ஆலோசனை பண்ணவேண்டியதுதான்!"

"ரைட். கிளம்பு..!"

இருவரையும் சுமந்துகொண்டு ருத்ராவின் புல்லட் சிட்டாகப் பறந்தது.

ஜெயக்குமாரைத் திடீரென்று தனது பங்களாவில் சந்தித்த இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடிப் போனார் கைலாசம். அவரிடம் பழைய பளபளப்பைப் பார்ப்பதில் ஜெயக்குமாருக்கும் திருப்தி.

"வாங்க ஜெயக்குமார். இப்பதான் வழி தெரிஞ் சுதா?" கைலாசத்தின அந்த மகிழ்ச்சியான குரல் வரவேற்பு மாடியில் இருந்த பிரசாத்தின் காதுகளிலும் விழ, மாடியி லிருந்து எட்டிப்பார்த்தான்.

ஜெயக்குமாரைத் திரும்பவும் சந்தித்ததில் ஏனோ முகம் கசங்கினான்.

"பிரசாத்... பிரசாத்!" கைலாசம் பிரசாத்தைக் கூப்பிட போட்ட சப்தத்தில் வேலைக்காரர்களெல்லாம் எட்டிப் பார்த்தனர். செயற்கையாக முகத்தைச் சரிப் படுத்திச் சிரித்தபடி இறங்கி வந்தான் பிரசாத்.

"வாங்க சார்..." என்று வாய் நிறைந்த வரவேற்போடு ஜெயக்குமார் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான்.

மளமளவென்று ஊரில் இருக்கும் பழங்கள் அனைத்தையும் வெள்ளித்தட்டில் வைத்து எடுத்து வந்து ஜெயக்குமார் எதிரே வைத்தனர்.

"மிஸ்டர் ருத்ரா எங்கே ஜெயக்குமார்? அவர் வரலையா?" கைலாசம் கேட்டபடி ஒரு ஆப்பிள் துண்டைக் கடித்தார்.

"உம்... சாப்பிடுங்க..." என்று ஜெயக்குமாரையும் ஊக்கப்படுத்தினார்.

"அவர் என்ன பண்றார்னு தெரியாது சார்... ஏன்னா நான் இப்போ ஒரு போலீஸ்காரன் கிடையாது" என்றான்.

"என்ன சொல்றீங்க நீங்க?" இவ்வளவு ஆர்வமாகக் கேட்டது பிரசாத்துதான்.

"ஆமாம் சார்! எங்க வீட்ல யாருக்கும் இந்த போலீஸ் வேலை பிடிக்கலை. எப்ப என்ன நடக்கும்னு சொல்ல முடியாத ஒரு டென்ஷனான வேலை இது. நம்ம பிரசாத் சார் கேஸை சக்ஸஸா முடிச்சுத் தந்த நல்ல பேரோட ரிசைன் பண்ணிட்டேன். ஏதாவது பிசினஸ் பண்ணலாம்னு பார்க்கிறேன்..."

"என்ன ஜெயக்குமார் நீங்க. உங்களை மாதிரி கூர்மையான, துடிப்பான இளைஞரை போலீஸ் இலாகா இழந்துடவே கூடாது. நீங்க தப்பு பண்ணிட்டீங்க..."

உரக்க ஆதங்கித்தார் கைலாசம்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை சார். என் மன நிலைக்கு அந்த வேலை ஒரு சரியான அடிமை வேல. அரசியல்வாதிகளுக்குச் சலாம் போட்டுக்கிட்டு, திருடனைப் பிடிக்கிறேன், கலவரத்தை அடக்கறேன்னு... மோசமான வேலை."

"நல்ல முடிவுதான் ஜெயக்குமார் உங்களுடையது. உங்க பிசினஸ் வாழ்க்கைக்கு என் வாழ்த்துக்கள்" என்று வலிய குறுக்கே நுழைந்து, வாழ்த்துச் சொன்னான் பிரசாத்.

ஜெயக்குமாரின் மனதுக்குள் அவனது வாழ்த்து ஒரு புதிய அர்த்தத்தோடு பதிந்தது.

"நீங்க பேசாம எங்க மில்லுல வேலைக்குச் சேர்ந்துடுங்களேன் ஜெயக்குமார். நீங்க போலீஸ்ல வாங்கினதைப் போல இரண்டு மடங்கு தரேன்!" கைலாசம் ரொம்ப ஆர்வமாகக் கேட்டார்.

"இந்த போலீஸ்காரனால் உட்கார்ந்து உடம்பு வளையாம வேலை பார்க்க முடியாது சார்" என்றான் ஜெயக்குமார்.

"உங்களை யார் உட்கார்ந்து வேலை பார்க்கச் சொன்னது? செக்யூரிட்டில செக்யூரிட்டி ஆபீசராயிடுங்க. எனக்கும் ரொம்பத் தெம்பா இருக்கும். என்ன சொல்றீங்க?"

அரைமனதாக அதற்குச் சம்மதிப்பவன்போல் வெட்டி வெட்டித் தலையை அசைத்தான்.

"ரொம்பச் சந்தோஷம். நாளைக்கே என்னை மில்லுல வந்து பாருங்க" என்றார் கைலாசம். கைலாசத்தை விட பிரசாத் அதிகமாய் சந்தோஷவயப்பட்டிருந்தான்.

எங்கே தன்னைத் திரும்ப வந்து குடைவானோ என்று பயந்தவன், இப்பொழுது தனக்கே தொழிலாளியாக மாறிப் போனதில் தான் உச்சிக்குப் போய் உல்லாசத்தில் விழுந்த மாதிரி இருந்தது அவனுக்கு.

ஐந்தரை ஏக்கர் விஸ்தீரணம். ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள். இருபத்துநாலுமணி நேரமும் ஓய்வில்லாமல் இயங்கும் எந்திரங்கள். டீக்கடை யூனியன், ஆபீஸ், கொடிக்கம்பம். நோட்டீஸ்போர்டு என்று சதா ஜனத்திரளோடு காட்சி தரும் மெயின்கேட்.

மொத்தத்தில் அந்த நேஷனல் மில் அதனுள்ளே நுழைந்திருக்கும் ஜெயக்குமாரை வாய் பிளக்க வைத்திருந்தது. கைலாசம் முன்னே நடக்கிறார்.

சில சமயங்களில் பின்னாலும் பல சமயங்களில் அவருக்குப் பக்கத்திலுமாக நடந்தபடி அந்த மில்லைச் சுற்றிப்பார்க்கும் அந்த வேலைதான் அவனைப் பொறுத்த மட்டில் எத்தனை இனியது!

"குட்மார்னிங் சார்..."

"குட்மார்னிங் சார்..."

"வணக்கம் சார்..."

"வணக்கம் எஜமான்..."

எதிர்படுவோர் கைலாசத்தைப் பார்த்து பயத்தோடும் பணிவோடும் கையைக் குவிக்க, அதை மிடுக்காக கைலாசம் அங்கீகரிக்க,

ஜெயக்குமாருக்குள் கொள்ளையடித்தாவது மில் ஓனர் ஆக வேண்டும் என பேராசை தலைகாட்டியது.

"எப்படி இருக்கு ஜெயா?" படுகித்தாப்பாய் கேட்டார்.

"நான் சொல்றதுக்கு என்ன சார் இருக்கு? இங்க எல்லா வேலை பார்க்கக் கொடுத்து வெச்சுருக்கணும்!" ஜெயக்குமார் கைலாசத்திடம் எஜமான விசுவாசம் காட்டத் தயாராகிவிட்டதை அவன் பேச்சு ஊர்ஜிதப் படுத்தியது.

வெற்றியோடு சிரித்தார் கைலாசம். பிறகு அவர் பக்கத்திலேயே சார்ஜ் எடுத்துக்கொண்டான். கைகுலுக்கித் தன் மகிழ்ச்சியை, பாராட்டைத் தெரிவித்தார்.

உடனேயே, "ஒரு முக்கிய விஷயம்" என்றார்.

"என்ன சார்?"

"எடுத்த எடுப்பிலேயே உன் சாமர்த்தியத்துக்கு ஒரு சோதனை..."

"சொல்லுங்க..."

"மில்லுல யாரோ சிலர் எப்படியோ பாலியெஸ்டர் நூலை அன்றாடம் கிலோ கணக்குல கடத்தறாங்க... செக்யூரிட்டியால எவ்வளவு முடிஞ்சும் சிலரைப் பிடிக்க முடியலை. அப்படிக் கடத்தறவங்களுக்கு ஒரு லீடர்... அந்த லீடரைப் பிடிக்கணும். இதனால் மில்லுக்கு பல லட்சம் லாஸ்."

"கேட்லதான் செக் பண்ணுவாங்களே சார்."

"திருடறவனுக்கு அது தெரியாதா? அவன் வேற ஏதோ விதமா சாமர்த்தியமா கடத்தறான். உனக்கு மீதி விஷயங்களை செக்யூரிட்டி இன்ஸ்பெக்டர் சொல்லுவார்" என்று முடித்துக்கொண்டு கிளம்பிவிட்டார் கைலாசம்.

ஜெயக்குமார் செக்யூரிட்டி இன்ஸ்பெக்டரை நெருங்கினான். அவர் ஏதோ சொன்னார். இவன் ஏதோ சொன்னான். அவர் தலையாட்டுகிறார்!

அவனுக்கு ஒசத்தியான தனியறை. தனி டெலிபோன் என்று கைலாசம் அசத்தியிருக்கிறார். அவனுக்கும் உல்லாசமாக இருந்தது. ஆனால் எத்தனை நாளைக்கு?

"என்ன ஜெயா... எவ்வளவு தூரத்துல இருக்கு உன் கண்டுபிடிப்பு?" ருத்ரா அந்தத் திரையரங்குகளின் வாசலில் நின்றுகொண்டு கேட்ட கேள்விக்கு மந்தமாய் சிரித்தான் ஜெயக்குமார்.

"நல்ல வேலை, நல்ல சம்பளம்! நிஜமாலுமே போலீஸ் வேலையை எங்க விட்டாலும் விட்டிடுவேனோன்னு பயமாயிருக்கு சார்" என்றான் அந்தச் சிரிப்பு அழியாமல்.

"தயவுசெய்து விஷயத்துக்கு வர்றியா?"

"இன்னும் அவன் என்னை முழுமையாக நம்பக்கூட இல்லை. அதுக்குள்ள எப்படி சார்?"

"ஆகலாம்... யார் கண்டா எப்படிப் பிடி கிடைக்கும்னு!"

"டிபார்ட்மெண்ட்ல கேட்டா?"

"கேஸ் நேச்சர் அவங்களுக்குத் தெரியாதா சார்?"

"உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? ஒரு நாள் உன்னைப் பத்திக் கேட்டு நாலைஞ்சு போன்கால். என் ஸ்டேஷனுக்குன்னு மட்டுமில்லாமல், உன் க்ரைம் பிராஞ்ச் செக்ஷனுக்கும் வந்தது. போன் பண்ணவங்க தங்களை சீனிவாசன், ராமநாதன்னு பொய் பேரைச் சொல்லிக் கிட்டு நீ ஜாப்ல இருக்கியா இல்லையான்னு விசாரிச் சாங்க... எல்லா இடத்துலயும் அவர் இப்ப ஜாப்ல இல்லைன்னு ஒரே பதிலைச் சொல்லிச் சமாளிச்சோம்."

"ஆச்சரியமாயிருக்கே! இருக்கலாம். அந்த வைகுலாசம்தான் நம்பாம போன் பண்ணியிருப்பார்."

"உனக்கும் அவர் பேர்லதான் சந்தோகமா?"

"ஆமா சார்! பிரசாத் ஒரு மென்டல். கோழை. ஆனாலும் அவன் முத்துசாமியை உப்பிலின்னு சொன்ன மாதிரி ஏதோ மர்மம் இருக்கு!" திரையரங்கின் மணி சப்தம் கேட்டதையே நுழைந்து இருவரையும் படம் பார்க்க அழைத்தது.

"ரைட் சார், நான் தவறாம காண்டாக்ட் பண்றேன்" என்றபடி கைகுலுக்கிவிட்டு அவரை வெட்டிக்கொண்டு சென்றார் ஜெயக்குமார்.

பத்மாவும் தனது இருக்கையைத் தேடி நகர ஆரம்பித்தாள்.

தவறாமல் தங்கள் பேச்சை யாரும் கவனிக்கிறார் களா என்று நோட்டம் போடத் தவறவில்லை அவர்.

19

யாரோ சொன்னாங்க... என்னன்னு?

யாருக்கும் விரோதி வெளியில் இல்லை.

கைலாசத்தின் பங்களாவில் திரும்பவும் தீட்சிதர்!

"ஒரு புயல் வீசி முடிஞ்சாச்சு தீட்சிதர். அவன் நீங்க சொன்ன மாதிரி மரணத்தோட வாசல் வரை போயிட்டு வந்துட்டான். அவன் தப்பிச்ச காரணமே இவளோட தாலிபலம்தான்!" என்று சாரதாவைக் காட்டி, சந்தோஷ மாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார் கைலாசம்.

"எல்லாம் நல்ல விதமாக நடந்தா சரி. இப்ப என்னை எதுக்குக் கூட்டிக்கிட்டு வந்தீங்க?" தீட்சிதர் விசாரிக்கிறார்.

"எந்த மருமக உங்களைத் தர்க்கம் பண்ணி மன வருத்தப்பட வெச்சாளோ அந்த மருமக கையாலேயே உங்களுக்கு மரியாதை செஞ்சாதான் ஆறுதலா இருக்கும்" என்று அவர் தீட்சிதரை குஷிப்படுத்திக் கொண்டிருக்கும் போதே சாரதாவும் ஆயிரம் ரூபாயோடு அங்கே வந்து விட்டாள்.

"என்னம்மா நீ? வெறும் கையாலயா பணத்தைத் தர்றது. வெத்தலை, பாக்கு, பழத்தோட வெச்சுத்தா...!"

கைலாசத்தின் வேண்டுகோளுக்காக அவள் திரும் பவும் மாடி ஏறினாள். "பொய் ஜோசியத்துக்கெல்லாம் ஆயிரம் ரூபாயா! ஹும். காலம் கெட்டுப்போச்சு..." என்று சொல்லிக்கொண்டே பழத்தட்டுடன் கீழே இறங்கும் பொழுது, ஒரு வாழைப்பழம் உதிர்ந்து கீழே விழுந்து சாரதாவின் பாதங்களால் மிதிபட்டு வழுவழுப்பாகப் பிதுங்கி, அவளை அப்படியே குப்புறத் தள்ளியது.

டாக்டர் ராஜலட்சுமி தன் மருத்துவமனையே தள்ளிக்கொண்டு வந்தும் பலனில்லை.

ஆசையாய்... மிக ஆசையாய்... அவள் அடிவயிற்றில் வளரப் பார்த்த அந்த உயிர்க்குஞ்சு உடைந்து சின்னா பின்னமாகி, 'அபார்ஷன்' என்னும் பெயரில் அவளை மீண்டும் பழைய சோகத்தில் புதைத்துவிட்டுப் போயி ருந்தது!

தீட்சிதர் விபூதி பிரசாதத்தைத் தந்து சாந்தப்படுத்த பார்க்கிறார். ஊரிலிருந்து வந்திருந்த அவள் அப்பாவும் அம்மாவும், "என் மகளுக்கு என்ன வயசா போயிடிச்சு? அடுத்து ஒண்ணு பெத்துக்கிட்டா போச்சு!" என்கிறார்கள். பிரசாத்துக்கும் அந்த 'அடுத்து ஒண்ணு பெத்துகிட்டா போச்சு' இலேசான ஆறுதலாகத்தான் அவனுக்குள் வடிகிறது.

ஆனால் கைலாசம் மட்டும் நிமிரவேயில்லை!

சிரைக்காத தாடியோடு கைலாசத்தைக் காண்பதில் ஜெயக்குமார் ஏதோ சோகம் இருப்பதை உணர்ந்தான்.

அதை வாய்விட்டுக் கேட்டும் விட்டான்.

கைலாசமும் நடந்ததைச் சொல்லி வருந்துகிறார்.

"சார், இட் ஈஸ் சிம்ப்ளி நேச்சர். அபார்ஷனுங்கறது ரொம்ப சகஜம். அடுத்த தடவை ரொம்ப ஜாக்கிரதையாக இருங்க சார்" என்றான்.

"அடுத்த தடவையா? முதல் தடவைக்கே என் மனசுக்கு மூணு வருஷம் தேவைப்பட்டது ஜெயக்குமார்... அபார்ட்டத்துக்கு நடுவுல என் மகன் ஒரு அதிசயப் பிறவி. இனி மனசுக்கு செக்ஸ்ல நாட்டம் வந்து, சாரதா கருத்தரிக் கிறது எப்போ? என் சந்ததி தழைக்கிறதெப்போ? எனக்கு நம்பிக்கையில்லை ஜெயக்குமார்!" என்று புலம்பித் தள்ளி யிட்டார் கைலாசம்.

"தீட்சிதர்... உங்க வாக்கு இப்படியா பலிக்கணும்! நல்லதா நாலு வார்த்தை சொல்லி அது நடக்கக்கூடாதா

எனக்கு?" மனம் வெடித்து அழுகிறார் அவர். ஜெயக் குமாருக்கு நெகிழ்ந்து போனது மனது.

"சார், கவலைப்படாதீங்க! எல்லாம் நல்லபடியா நடக்கும்" என்று ஆறுதல் சொல்ல முடியாது தோற்றுப் போனான் அவன்!

சேலம் கடைத்தெரு!

மனித நடமாட்டத்தில் பிதுங்கிக் கொண்டிருந்தது. இரண்டு பக்கத்திலும் காய்கறிக்கடைகள் ஆக்கிர மித்திருந்த புண்ணியத்தில் முன்னும் பின்னுமாக ஏகப் பட்ட வாகனங்கள் தேங்கித் திணறின.

குறிப்பாக அந்த வாடகை சைக்கிள் இளைஞன் குமார்.

"நாசமாப் போன கடைத்தெரு! இது வழியா நான் இன்டர்வியூக்குப் போக வந்தேன் பாரு... என்னை செருப் பால அடிக்கணும்!" வாய்விட்டுச் சபித்தான். பாதையை அடைத்துக்கொண்ட கடைக்காரர்களை முறைத்துப் பார்த்தான்.

"தம்பி, ரொம்ப சலிச்சுக்கிறியே... இந்த இடத்துல கடை போடறதுக்கு நாங்க போலீசுக்கு ஒரு நாளைக்கு பத்து ரூவா வரை மாமூல் தர்றோம் தெரியுமா? சும்மா ஒண்ணும் இல்ல."

"அதிசயமா லஞ்சம் கொடுக்காம, மந்திரியைப் பார்க்காம, எம்.எல்.ஏ., எம்.பி. காலைப்பிடிக்காம, போட்ட அப்ளிகேஷனுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்துக்கு ஒரு வேலை வந்திருக்கு எனக்கு! அதுக்கான இன்டர்வியூ பத்துமணிக்கு. இங்கேயே மணி ஒன்பது ஐம்பது. நான் என்ன பண்ணுவேன்?"

அவன் பேச்சுக்கு மறுபேச்சாக யாராவது ஒருவர் பதில் சொல்லிக்கொண்டே வந்தார்கள். மெல்ல

ஆமையாக பஞ்சு மூட்டை லாரியும் நகர்ந்து, நகர்ந்து ஒரு வழியாக கடைத்தெரு தாண்டிவிட்டால் போதும் என்று வேகமெடுக்க அவனுக்கும் தெம்பு வந்தது.

பித்தளை டபாராவில் நெருப்புத்துண்டுகளைக் கொட்டி அதன்மூலமாக இஸ்திரி போட்ட பேண்ட்டும், சட்டையும் தங்களின் சிக்கென்ற மடிப்பை, அவன் சைக்கிளை மிதிக்கும் கஷ்டமான நிலையில் இருந்து கசங்கிப் போயின.

அதைப் பார்த்து மனம் துவண்டுபோனான். எப்படியோ அடித்துப் பிடித்து அவன் நேஷனல் மில்லின் பரபரப்பான மெயின்கோட்டை எட்டும்போது மணி பத்தேகால்!

செக்யூரிட்டியில் தனது இன்டர்வியூ கார்டைக் காட்டிவிட்டுப் பரிதாபமாகப் பார்த்தான்.

"பத்துமணி இன்டர்வியூவிற்கு ஒன்பது மணிக்கே அவனவன் வந்துட்டான். நீ என்ன ஆடி அசைஞ்சு கால் மணி லேட்டா வர்றே...?" செக்யூரிட்டியில் வாட்ச்மேனின் கேள்வி.

"சார்... சார்... ப்ளீஸ்!" அவன் கண்களில் நீர் திரண்டு விட்டது. கூர்மையாகத் தனது அறையின் கண்ணாடிச் சாளரம் வழியாக இதைக் கவனித்துக்கொண்டிருந்த ஜெயக்குமாரின் இதயம் இதனால் லேசாய் இளகியது.

"சரி... சரி... போ. நான் உள்ள சொல்லிக்கிறேன்" அவனது நன்றி பளபளக்க ஜெயக்குமாரைப் பார்த்துக் கைகூப்பினான்.

இருபது நாட்களுக்குப் பிறகு,

காலைப்பொழுது மில்லைவிட்டு அந்த மாலை வேளையில் வெளியேறிக் கொண்டிருந்தார்.

கேட் அருகே கதவு திறக்கப்பட வேண்டி அவர் கார் நின்றது. சல்யூட் கொடுத்து வழியனுப்ப வந்த ஜெயக் குமார் ஒரு விநாடி ஆச்சரியமாய் அதிர்ந்தான்.

காரணம்?

கைலாசத்துக்குப் பக்கத்தில் குமார், மிக மிடுக்காய்!

கார் பறந்தது. ஜெயக்குமார் சூள்கொட்டிச் சிந்தித்தான்.

'வாழ்க்கைதான் சிலருக்கு எந்தெந்த விதத்திலெல்லாம் வருகிறது?'

கைலாசம் திரும்ப உற்சாகத்துக்குள் நுழைவதை ஜெயக்குமாரால் நன்றாக உணர முடிந்தது. சாரதாவின் கருச்சிதைவு அவரை காலாவதியே ஆக்கிவிட்டதாகக் கருதியவன் அவரின் இந்த மாற்றத்தை மிக அதிசயமாகவே கருதினான்.

வீட்டில் ஏதாவது நல்ல மாற்றம் ஏற்பட்டிருந்தால் ஒழிய இது சாத்தியம் இல்லை என்பது அவனுக்குப் புரிந்தது. சந்தேகம் வந்து நுழைந்தது.

'பிரசாத்தைப் பார்த்தால் என்ன?'

போய்ப் பார்த்தான்.

"வாங்க ஜெயக்குமார். ஏது இவ்ளோ தூரம்?"

"அப்பாவைப் பார்க்கலாம்னு- உங்களையும்தான். ரொம்ப டல்லா தெரியறீங்களே?"

"அதிர்ஷ்டமில்லை, தெய்வத்தோட கருணையில்லை. நான் எதிர்பார்க்கற சந்தோஷமில்லை. உங்களுக்குச் சொன்னா புரியாது."

"உங்க மனைவிக்கு நேர்ந்த அந்த அபார்ஷன் விபத்து உங்களை ரொம்பதான் பாதிச்சிடிச்சு-"

அப்பொழுது அதிசயமாக அங்கே வந்தான் குமார். "ஹலோ குமார், எப்படி இருக்கே-?" ஜெயக்குமார்.

"வாங்க சார். நான் கேக்க வேண்டிய கேள்வியை நீங்க கேக்கறீங்க."

"என்ன சொல்றே நீ?"

"நான் இப்ப இங்கதான் தங்கியிருக்கேன். நம்ம பாஸ் என்னை அவர் பி.ஏ.வா அப்பாய்ண்ட் பண்ணி இங்கேயே தங்கும்படி பண்ணிட்டாரு. எங்கேயோ இருந்தேன். எப்படியோ ஆக்கிட்டாரு சார். நீங்க மட்டும் என்னை அன்னிக்கு உள்ளே விடாம போயிருந்தா இதெல்லாம் எது?"

நிஜமாலுமே மானசீகமாகப் பேசினான் குமார். ஜெய்க்குமாருக்குள் வியப்புக் குதிதாளம் போட்டது.

"ஜெயக்குமார், குமார் ரொம்ப நல்லா மூவ் பண்றாரு. அப்பாவோட பி.ஏ. செலக்ஷன் ஏ ஒன்!"

பிரசாத் அளித்த சர்டிபிகேட் ஜெயக்குமாரை எங்கோ கிள்ளியது. அப்படியே எழுந்துகொண்டான். வீட்டுக்குப் பறந்தான்.

வீட்டில்,

செல்மூலமாக ருத்ராவை அழைத்துவிட்டு-

"சார், அலிபாபா குகை ரகசியம் மாதிரி கதை எப்படியெப்படியோ போய்க்கிட்டிருக்கு. சந்தேகப் படும்படியா ஒரு இன்சிடென்ட்கூட நடக்கலை. கைலாசம், பிரசாத் இரண்டுபேரையும் புரிஞ்சுக்கவே முடியலை."

"உனக்கு ஒரு ஸ்கூப் நியூஸ் தரேன். சந்தோஷப் பட்டுக்கோ."

"விஷயத்தைச் சொல்லுங்க."

"கைலாசம் போய் இரண்டு லட்சத்தை உப்பிலிக்குக் கொடுக்கறதுக்காக எடுத்துக்கிட்டுப் போனது ஞாபக மிருக்குல்ல."

"இது ஒரு கேள்வியா? அந்த நோட்டோட நம்பர் களை நோட் பண்ணினதே நான்தானே?"

"அந்த நோட்டுல ஒரு பத்தாயிரம் இப்ப கடைத் தெரு பேங்க் ஒண்ணுல ரிசீவ் ஆகியிருக்கு!"

"அது எரிஞ்சு போகலைன்னு நான் சொன்னது ரொம்ப சரிதான்!"

"மெல்ல உப்பிலி சமூகத்துல சகஜமா நடமாட ஆரம்பிச்சுட்டதுக்கான அறிகுறி இது."

"அதுசரி. பேங்குல அதைப் போட்டது யாரு?"

"வேற யார்? ராஜகோபாலுங்கற பேர்ல உப்பிலி தான்!"

"இன்னும் என்னா சார் பேச்சு, அந்த ராஜ கோபாலை அதாவது உப்பிலியைப் பிடிக்காம?"

"நான் போனா ஓடிடுவான். எஸ்.ஐ. கருணாகரனை ஒரு படையோட அனுப்பியிருக்கேன். விவகாரம் க்ளை மாக்ஸைத் தொட்டாச்சு. பிரசாத்தோட யோக்கியதை, கொலைகளுக்கான காரணம் எல்லாம் வெட்ட வெளிச்ச மாயிடும் பார்..."

"சீக்கிரம் முடியுங்க சார். எனக்கும் சஸ்பென்ஸைத் தெரிஞ்சுக்க ஒரே துடிப்பா இருக்கு. அதோட இந்த செக்யூரிட்டி பூத் வேற ஒரே புழுக்கம். சீக்கிரமா விடுதலை வேணும்."

"வருத்தப்படாதேம்மா. செல்லை கூடவே வெச்சுக்கோ. எப்பவும் உனக்கு அழைப்பு வரும்."

"அதுக்குப் பேசாம ஒரு வாரம் லீவு போட்டுட றேன்."

"எது வசதியோ அதைச் செய்!"

ஜெயக்குமார் செல்லை முடக்கிவிட்டு ஹைய்யா என்று எகிறிக் குதித்தான்.

ருத்ராவின் பிடியில் உப்பிலி என்னும் ராஜகோபால் நார் நாராக உரிக்கப்பட்டுக் கொண்டிருந்தான்.

அவனால் அடியைத் தாங்கமுடியாமல் கக்க ஆரம்பித்தான் உண்மைகளை...

"சார்... எனக்கு எதுவுமே தெரியாது! நான் பிரசாத்துக்கு பெத்தடின் கஞ்சா சப்ளை பண்றவன். அவர்கிட்ட ரொம்ப நாளா என் மகள் கல்யாணத்துக்கு ஒரு பத்தாயிரம் கேட்டிருந்தேன். இப்ப கொடுத்தாரு! அதை பாதுகாப்பா பேங்கில போடவந்தேன் அவ்வளவுதான் சார்!"

- கதறி வழிந்த அவனை அடிப்பதை நிறுத்திவிட்டு உடனேயே யோசிக்க ஆரம்பித்தார் ருத்ரா.

20

யாரோ சொன்னாங்க... என்னன்னு?

கதையை முடிச்சுக்கோன்னு...!

அந்த இரவு வேளையில் அளவான டேபிள் லைட் வெளிச்சத்தில் மர்ம நாவலுக்குள் ஏழாம் அத்தியாயத்தில் உலகை மறந்திருந்தான் குமார்.

வேலைக்காரன் வைத்துவிட்டுப் போன பால், 'என்னைச் சாப்பிடு' என்று சொல்லி அலுத்துப்போய், போர்வையைப் போர்த்திக் கொண்டு தூங்கியே விட்டது!

"தம்பி, பாலைச் சாப்பிடுங்க!" வெகுநேரம் கழித்து பொறுக்கமாட்டாமல் வேலைக்காரன்.

எடுத்துக் குடித்தான்.

திரும்ப அத்தியாயத்துக்குள் நுழைந்தான்.

ஒரு நிமிடம் போயிருக்கும்.

உடம்பை என்னவோ பண்ணியது. நரம்புகளில் ஒரு அசாத்திய புடைப்பு! இடுப்புக்குக் கீழே திடீர் விறைப்பு!

கண்ணை வேறு கரித்துக் கரித்து மறைந்தது.

'என்ன வந்தது எனக்கு?' - கேள்விகூட உடனேயே நினைப்பில் அழிந்துபோனது! வேலைக்காரன் இப் பொழுது அவனைக் கைத்தாங்கலாய் பிடித்துத் தூக்கிக் கொண்டு மாடிப்படி ஏறினான்.

கைலாசம் வேறு ஊருக்குக் கிளம்பிப் போயிருந்தார்.

சாரதா தன் படுக்கையில் ஏறத்தாழ அவன் நிலையில் கிடந்தாள். உடம்பை முறுக்கி முறுக்கி, முடுக்கிவிடப்பட்ட காமாந்தகத்தீயில் வெந்துக்கொண்டிருந்தாள். அவள் படுக்கை அருகே வந்து நிறுத்தப்பட்டான் குமார். அவள் உடம்பை முறுக்கிய முறுக்கில், ரவிக்கை ஊக்குகள் சில விலகி, அவன் அவள் மேல் விழுந்தான்!

அறைக்கதவு வசதியாக மூடிக்கொண்டது!

இந்த நேரம் பார்த்துதானா ருத்ரா - ஒரு போலீஸ் குழுவோடு அங்கே வரவேண்டும்!

கதவைத் திறந்த வேலைக்காரன்(?) திகைத்தான்.

"என்ன பிரசாத், வேலைக்காரன் மாதிரி?"

ருத்ரா பேசியபடி பங்களாவினுள் பிரவேசித்தார். பார்வை பங்களாவை ஒரு வலம் வந்தது.

பிரசாத்தின் இதயம் தொண்டைக்கு வந்துவிட்டது.

"சார், என்ன விஷயம் திடீர்ன்னு?" பரிதவிக்கக் கேட்டான் பிரசாத்.

"உங்க பங்களாவைச் சோதனை போடணும். நீங்க ஏற்காடு மலைல கார் விபத்துல உப்பிலியோட சேர்ந்து எறிஞ்சுட்டதா சொன்ன ரூபாய்கள் எரியலைன்னு எங்களுக்குத் தெரிய வந்திருக்கு. அதுல ஒரு சொற்பத் தொகையை நாங்க அரஸ்ட் பண்ணிட்டோம். சொச்சத்

துக்குத்தான் உங்களைத் தேடி வந்திருக்கோம். அது சம்பந்தமாக உடனடியாக உங்களை என்கொயரி வேற பண்ணணும்."

"என்ன சார், என்னவெல்லாமோ பேசிட்டு? அப்பா ஊர்ல இல்லாத சமயத்துல."

ருத்ரா அவன் பேச்சை லட்சியமே செய்யாமல் மாடி ஏறினார். ஒவ்வொரு அறைக்குள்ளும் நுழைந்தனர் போலீசார்.

"செக்கிங்குக்கு பர்மிஷன் லெட்டர் வாங்கிட்டுத் தான் வந்திருக்கிறேன் பார்க்கறீங்களா?" என்று கேட்டுக் கொண்டே. ருத்ரா அவன் சாத்திவிட்டு வந்த அறைக் கதவைச் சட்டென்று திறந்தார்.

திறந்த வேகத்தில் பேயறைந்தது போல் மூடினார்.

உடம்பு ரத்தம் உறைந்துபோனமாதிரி பல வினாடி கள் நின்றுவிட்டார்.

அவரது ஸ்தம்பிப்பை டாய்லெட்டில் இருந்து வந்த ஒரு போலீஸ் கலைத்துவிட்டுச் சொன்னார்.

"சார், டாய்லெட் கண்ணாடிக்குப் பின்னாலே ஒரு ரகசிய அலமாரி. அதுல கட்டுக்கட்டா பணம்!"

போலீஸ் அலுவலகம்!

ருத்ராவிற்குத் தனது மிதமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார் டிஎஸ்பி.

"எனக்குக் கிடையாதா சார்?" ஏங்கிப் போய் பார்க்கும் ஜெயக்குமாரையும் பாராட்டி கைகுலுக் கினார்.

எல்லாவற்றையுமே இருவருமே மிதமாக ஏற்றுக் கொண்டு நடக்கின்றனர். மரத்தடியில் நின்றுகொண் டிருக்கிறது புல்லட்.

"சார், ஸ்டேஷனுக்குத்தானே?" ஜெயக்குமார் கேட்டான்.

"இல்ல, அமெரிக்காவுக்கு," என்கிறார் ருத்ரா கேலியாக!

சிநேகமாய்ச் சிரித்து அவர் தோளைக் கட்டிக் கொண்டான் ஜெயக்குமார். பிறகு உரிமையாக ஏறி அமர்ந்துகொள்ள மறுபடியும் புல்லட் இலகுவாக வழுக்கத் தொடங்கியது.

"விஷயத்துக்கு வா. நடந்து முடிந்ததை நினைச்சா ஒரே த்ரிலிங்கா இல்ல?"

"சங்கடமான விஷயம் த்ரில்லா? அந்த சாரதா பொண்ணை விட பரிதாபமா இருக்காரு எங்க முதலாளி. இனி இந்த ஜென்மத்துல அவராலே வெளியே தலைகாட்ட முடியாது."

"உங்க முதலாளியா?"

"சாரி, பழைய விசுவாசத்துல பேசிட்டேன்."

"ஆமா, இப்ப அந்தப் பொண்ணு எப்படி இருக்கு?"

"குடிச்ச விஷத்தை அரும்பாடுபட்டு வெளில எடுத்துட்டாங்க. இப்ப அந்தப் பொண்ணு அவங்க அப்பா, அம்மாகிட்ட இருக்குன்னு நினைக்கிறேன்."

"இந்தப் பயதான் திரும்ப மென்டலாயிட்டான். சைக்கியாட்ரிஸ்ட் நாகபூஷணம் எந்த மாதிரி ரிப்போர்ட் தரப்போறாருன்னு தெரியலை"

நாகபூஷணத்தின் எளிய மருந்துவமனையில் உள்ளே செலுத்தப்பட்டிருக்கும் ஊசி மருந்துகளின் செயல் வினையில் எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி மனது ஒரு புள்ளியில் லயித்திருக்க, அவன் வாக்குமூலம் கொடுக்கத் தொடங்கினான்.

"என் பேர் பிரசாத்! எங்கப்பா பேர் கைலாசம். நேஷனல் மில் ஓனர். காலேஜ் லைஃப்லையே எனக்குப் போதைமருந்து பழக்கம் உண்டு. அதனால நான் உடல் நலத்தையெல்லாம் இழந்துட்டேன். குறிப்பாக ஒரு ஆண் எதை இழந்தாலும் இழக்க விரும்பாத ஆண்மையையே நான் இழந்துட்டேன்.

இது கல்யாணத்துக்குப் பிறகுதான் எனக்குத் தெரிஞ்சது. என் மனைவியும் என்னைச் சந்தேகப்படத் தொடங்கினாள். அப்பாவும் தினம் திட்டி வதைத்தார். சொந்தபந்தம், நண்பர்கள் எல்லோரும் பைத்தியம், ஒன்பதுன்னு கேலிசெஞ்சாங்க. என்னால வேதனை தாங்கமுடியலை. டாக்டர் விஸ்வநாத்கிட்ட போனேன். ஸ்டாப் நர்ஸ் அமிர்தவல்லி உதவியோட அவர் என்னைச் சோதித்துப் பார்த்துட்டு நான் ஆண்மை இழந்துட்ட விஷயத்தை அவர் சொன்னார். என்னால இதை ஜீரணிக்க முடியலை.

இந்த நிலைல அப்பா வேற சொத்துக்களைப் பேரப் பிள்ளைகளுக்குன்னு எழுதி வெச்சிட்டார். இல்லேன்னா அவ்வளவு சொத்தும் கோயிலுக்காம். தட்டிக் கேட்டேன். திட்டினார். தறுதலைன்னார். ஒவ்வொரு பைசாவுக்கும் நான் என் மனைவி சாரதாவை நாடும்படி பண்ணினார். சாரதாவோ என்னைத் தீர்மானமா சந்தேகப்படற நிலைக்கு வந்துட்டா.

என் நண்பன் மகேஷ்கிட்ட சொன்னேன். புலம்பி னேன். அவன்தான் எனக்கு உதவி செஞ்சான். மேல் நாட்டுல இந்த மாதிரி பிரச்னை வந்தா டெஸ்ட் டியூப் மூலமா குழந்தை பெத்துக்கறதை எடுத்துச் சொன்னான்.

ஆனா எனக்கு ஆண்மையில்லைங்கற விஷயம் வெளியே தெரியறதை நான் விரும்பலை. அது மட்டுமல்ல,

அப்பா என் ரத்தத்துல வாரிசு வரணும். அதுதான் சொத்தைக் கட்டி ஆளணும்னு தீர்மானமா இருந்தார்.

இந்த நிலைலதான் தொடர்ந்து பத்து நாள் என் மனைவி வீட்டுவிலக்கான நான்காம் நாள்ல இருந்து மயக்க மாத்திரை - காமத்தைத் தூண்டிவிடக்கூடிய மாத்திரை உதவியோட ரொம்பச் சிரமப்பட்டு மகேஷை என் மனைவியோட இணைச்சேன். கட்டிலுக்கு அடியில் அவன் படுத்திருப்பான். நான் சம்போகத்துல ஈடுபடற மாதிரி ஈடுபட்டு அவளையும் அரைபோதைல வெச்சு - விளைக்கை அணைச்சுட்டு, படுக்கையில இருந்து கீழே விழுந்துடுவேன். மகேஷ் என் இடத்தைப் பிடிச்சு செயல்பட்டான். ஆனா மகேஷோ இந்தச் சம்பவத்துக்குப் பிறகு என்கிட்ட அட்வான்டேஜ் எடுத்துக்கிட்டு அடிக்கடி பணம் கேட்டான். எனக்குச் சங்கடமாயிருந்தது. நான் நினைச்ச மாதிரி என் மனைவி கருத்தரித்தாள்.

மகேஷ் பணம் கொடுக்கற வரைக்கும் பிரச்னை யில்லாதவன். என்கிட்ட பணம் இல்லாதப்ப நான் என்ன செய்ய முடியும்? ரொம்ப குழம்பினேன். பெரிய தப்பு பண்ணிட்டது புரிஞ்சது.

அப்புறமா எதுக்கும் துணிஞ்சு ஒரு முடிவுக்கு வந்தேன். முழுக்க நனைஞ்சாச்சு, முக்காடு எதுக்கு... எனக் கொலை செய்யத் தீர்மானிச்சேன். நான் படிச்ச மர்மக் கதைகள் தைரியம் தந்தன. போலீசை ஏமாற்ற வழி காட்டின உப்பிலியா உருமாறினேன். போலீஸ் சந்தேகப் படக்கூடாதுங்கறதுக்காகச் சமயத்துல எனக்கே மிரட்டலை என் மனைவி மூலமா, அப்பா மூலமா கொடுத்துக்கிட்டேன். முடிஞ்ச அளவு நான் கொலைக்குப் பயப்படற மாதிரி நடிச்சேன்.

எல்லாம் தெளிவா நடந்தது! இறுதியா கொலை களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, போலீஸ் தொந்தரவை

நிரந்தரமா தவிர்க்க வழித்தேடினப்போ பேப்பர்ல முத்துசாமியோட மரணச் செய்தியைப் பார்த்தேன்.

அவன் பிணம் என் பிரச்னை தீர்க்க உதவும்னு முடிவுபண்ணி ஆவியூர் போய் பிணத்தை எடுத்து வந்தேன். ஏற்காட்ல எஸ்டேட் நடுவுல உள்ள பழைய வீட்ல அந்தப் பிணத்தை வெச்சுக்கிட்டு க்ளைமாக்ஸை நடத்தினேன்.

க்ளைமாக்ஸ்ல நான் தப்பிச்சுக்கறதோட நீண்ட நாள் செலவுக்கு என் மனைவிகிட்ட கைநீட்டாதபடி இருக்க பணத்தையும் சம்பாதிக்க முடிவு செஞ்சு, என் அப்பாவை மிரட்டி இரண்டு லட்சம் கேட்டேன். போலீஸ் கட்டாயம் வரும்ங்கறது எனக்குத் தெரியும் வரணுங்கறதுதான் என் விருப்பம். அப்பதானே முத்துசாமி பிணத்தைப் பார்த்து உப்பிலிங்கற நான் இறந்துட்டதா நம்பும்?

ஏற்கெனவே முத்துசாமியை அடையாளம் சரியா காணமுடியாதபடி சிதைச்சு எரிச்சு வைத்திருந்தேன். காருக்கு வெடிவெச்சு இலேசாதான் கறுக்கினேன். இடது கைல உப்பிலின்னு நான்தான் முத்துசாமி பிணத்துக்குப் பச்சை குத்தினது.

போலீசும் நம்பிடுச்சு. எல்லாம் நல்லபடியா முஞ்சிடிச்சு. ஆனா எதிர்பாராத விதமா என் மனைவிக்கு அபார்ஷனாயிடுச்சு. நிலைகுலைஞ்சு போனேன். அனாதை குமார் கைகொடுத்தான். இந்தத் தடவை குமார் தனக்குத் தெரியாமலே உதவும்படி பண்ணினேன்.

ஏன்னா, மகேஷ் மாதிரி பின்னால இவனும் மாற மாட்டான்னு என்ன நிச்சயம்? ஆனா அதற்குள்ளே போலீஸ் வந்து என்னை பிடிச்சிடுச்சு..."

நீண்ட அவனது வாக்குமூலத்தை நாகபூஷணத்திடம் இருந்து வாங்கிக்கொண்டு நன்றியோடு கிளம்பினார்கள் ருத்ராவும் ஜெயக்குமாரும்.

இருவரின் காலுக்கும் விலங்கு மாட்டி இழுத்த மாதிரி பலமான சப்தம்போட்டது டெலிபோன். ஜெயக் குமார் பொய்யாய் பயப்படுவது போல் முகபாவம் காட்டினான். நாகபூஷணம் அட்டெண்ட் செய்தார். மலர்ச்சியோடு ரிசீவரை எடுத்திருந்தவர், ஏனோ சட்டென்று கசங்கிக்கறுத்து எல்லாமுமானார்.

"என்ன ஆச்சு டாக்டர்?"

"மிஸ்டர் கைலாசம் அவர் மருமகள் சாரதாவைத் தன் சொத்துக்களுக்கு வாரிசா நியமிச்சுரட்டும். தன் பழைய உயிலை காலாவதியாக்கிட்டும்."

"ஆக்கிட்டும்..."

"துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக்கிட்டாராம்!"

"மைகாட்..." அதிவேகமாக கைகளைக் குத்திக் கொண்டார் ருத்ரா.

"இப்ப எங்க சார். ஸ்டேஷனுக்குத்தானே?" ஜெயக் குமார் சுரத்தில்லாத குரலில் கேட்டான்.

"முதல்ல ஒரு பூக்கடைக்கு. அப்புறமா மிஸ்டர் கைலாசம் வீட்டுக்கு!"

பதில் பேசாமல் அவரது புல்லட்டின் பின்னால் ஏறி அமர்ந்தான். படு இரைச்சலாய் பறக்கத் துடிக்கும் அந்த எந்திர வாகனம்கூட சோகமயமான மாதிரி சப்தம் அதிகமின்றி அவர்களைச் சுமந்துகொண்டு ஓடத்தொடங்கியது!

-முற்றும்-